# ...ளுடைப்
# பொன்மொழிகள்

ஆசிரியர்

M. சோமசுந்தரம் பிள்ளை, B.A., L.T.,
முன்னைய தலைமை ஆசிரியர்



O-, 822
N48
113233

# ... பொன்மொழிகள்

ஆசிரியர்
**M. சோமசுந்தரம் பிள்ளை, B.A., L.T.,**
உறுப்பினர், R. P. A. மன்றம் லண்டன் மாநகர்.

**திராவிட இல்லம்**

**காட்டுமன்னார் கோவில்**

உரிமை ஆசிரியரது] 1948 [மொக்கு—1.

முதற் பதிப்பு 1948

O~ 824
NH8

## பணிவுரை

மேனாட்டறிஞர் சிலரின் பெருங்கருத்துகளை தமிழ கத்தே, தமிழ் மொழியிலே பரவச் செய்ய வேண்டுமென்ற விழை வினடியாக எழுந்தது இச்சிறுநூல். இதிற் கொண்ட பேரறிஞர், பேக்கன், எமர்சன், ரஸ்கின், அடிசன் ஆகிய நால் வரே. அவர் கருத்துகளை முதநூற்சாரங் குறையாது தமிழில் வழங்க ஆற்றல் இலனெனினும், விழைவின் பெருக்கம் எழுதத்தூண்டியது. ஆகவே, குற்றங்கள் பல அறிஞர்கள் காணுதல் கூடும். எனினும் இவ்வழி, நூல்கள் பல தமிழில் எழவேண்டு மாதலால், அதற்கு இது ஒருகால் வழிகாட்டி யாகக் கூடுமெனும் நம்பிக்கையால் வெளிவந்தது.

ஆதலால், அப்பணியையேனும் இச்சிறுநூல் செய்யு மாயின் அதுவே களிப்பாகும். அதை வழங்கும் பொருட் டாயினும் தினைத்துணை நன்றி செயினும், பனைத்துணையாக் கொள்ளும் தமிழகத்தை இதை ஏற்றுக்கொள்ள வேண்டு கின்றேன். இதனை சீருறச் செய்ய விரும்பும் அறிஞர்களின் மதியையும் அவாவுகிறேன்.

மன்னார்குடி
சிதம்பரம்

M. S. பிள்ளை,
ஆசிரியர்.

# முகவுரை

'மேனாட்டுப் பொன்மொழிகள்' என்னும் பெயரால், என் நண்பரும், தமிழன்பரும், ஆகிய திரு. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ள நூல், அறிஞர்க்கு ஓர் அருவிருந் தாகும். கல்லூரியிற் பயிலும் காலத்திலேயே பிள்ளையவர் களுக்குக் கல்வி கேள்விகளில் ஆர்வம் அதிகம்; அல்லும் பகலும் ஆங்கில நூல்களில் ஆழமுடையனவற்றை ஓதி யுணர்ந்த வண்ணமாயிருப்பாரகள். அந்த ஆர்வம் நெடுக வளர்ந்து சிறப்புற்று இத்தகைய அறிவு நூல்களை இயற்றும் பணியில் அவர்களை உய்த்திருக்கின்றது. மேலை நாட்டறிஞர் களுள் கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் உடையவ ராகிய பேக்கன் முதலிய நால்வர், வாய்மொழியினின்றும் திரட்டப் பெற்றுள்ள நன்மொழிகள் பொன்மொழிகள் என்ற பெயருக்கு மிகப் பொருத்தமுடையனவாகும். ஆங்கில மொழியில் அமைந்த அவர்தம் கருத்துக்களைத் திட்ப நுட்பங் குறையாமல் தமிழிலே பெயர்த்துத் தந்துள்ள, பிள்ளையவர் களின் மொழித்திறம் பாராட்டுதற்குரியது. ஒல்லும் வகை யால் பிறமொழிச் சொற்களை யொருவி, நல்ல தமிழில் எழுதப் பெற்றுள்ள இந்நூலை அறிவறிந்த மக்கள் ஆதரித் துக் கற்பர் என்பதில் ஐயமில்லை. இத்தகைய நூல் பல இயற்றி, ஆசிரியர் தாம் பெற்ற அறிவின்பத்தைத் தமிழகத் தார்க்குத் தருவார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை,
2-3-'48.

ரா. பி. சேதுப் பிள்ளை.

# PART I

## உள்ளுரை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | இயற்கையுலகும் ஒழுக்கமும் ... | 5 |
| 2. | மூன்று இயற்கைப் பொருள்கள் ... | 13 |

# இயற்கை

## 1. இயற்கையுலகும் ஒழுக்கமும்

1. இயற்கையே பொருள், இயற்கையே அழகு, இயற்கையே மொழி, என்பது அமையுமாயின், இயற்கையே ஒழுக்கமென்பதும் அமையும்.

2. இடம், காலம், சமுகம், உழைப்பு, வெப்பநிலை, உணவு, ஊர்தல், பிராணிகள், பொறி வலிமை முதலியன, நாடோறும், புதைபொருளுடைய நீதிகள் பலவற்றை நமக்குக் கற்பிக்கின்றன. பொருளின் குணம் ஒவ்வொன்றும்—கெட்டியோ, கடினமோ, அசையாமையோ, பெருக்கமோ, உருவமோ, பொடிதலோ—மாந்தரின் அறிதற்றன்மைக்கு ஓர் கல்விச்சாலை. அறிதற்றன்மை, சேர்த்தும் வகுத்தும், இணைத்தும், அளந்தும் செய்து, இயற்கையின் அருங்காட்சியில், தன் செய்கைக்கு வேண்டிய உணவும், இடமும் பெறுகின்றது. இதற்கிடையே, பகுத்தறிவு, மேற்கூறிய பாடங்கள் யாவற்றையும் தன் உலைக்களத்திலிட்டு, மனதிற்கும் பொருளுக்குமுள்ள உறவைக் கண்டறிந்து மகிழ்வுறுகிறது.

3. இயற்கை, சிந்தனையினடியாய்ப் பிறக்கும், உண்மைகளை யறிவதற்கு ஏற்பட்ட ஒழுக்கக்கோல். காணப்படும் பொருளோடு உண்டாகும் நம் உறவு, வேற்றுமை, ஒற்றுமை, வரிசை, இருத்தல், காணல், முதலிய பாடங்கட்கு முதிர்ந்த பயிற்சிக் கூடம்; பல ஒன்றிலிருந்து அப்பல ஒன்றையும் அடக்கி நிற்கும் பேரொன்றிற்கு ஏணி; அமையவேண்டிய உறுப்பின் நுட்பத்திற்கு ஏற்றவாறு, போதனையைக் கொண்டுளது; நாள்தோறும், ஆண்டுதோறும், முடிவடையாது, நெடிய களைப்புறு பயிற்சியைப் பயக்குகின்றது; கவலைகளும், இடையூறுகளும், திகைப்புகளும் ஓயாது அதனால் எழுகின்றன; மாந்தரின் சிறுமையைக் கண்டு தன்

வெற்றி முரசை யொலிக்கின்றது; பொருளின் மதிப்பில் வாதம் நிகழ்த்துகிறது; வட்டியைக் கணக்கிடுகின்றது;— இவையெல்லாம், மனத்தின் கரத்தை உருப்படுத்துதற் கன்றோ! நல்லெண்ணங்கள், செயல் வழிப்பட்டாலன்றி நற்கனவுகளைவிட மேன்மையல்லவென்று அறிவுறுத்து வதற்கன்றோ.!

4. பொருளும், பொருளினும் கடன்கோடலும் அதே நற்பயனை யளிக்கின்றன. விதவை, அஃதை, அறிவின் புதல்வர் முதலியோர் அதனை அஞ்சுகிறார்கள்; கண்டு வெறுப்படைகிறார்கள். கடன், காலத்தை விழுங்குகின்றது; பெரியோர்களைக் கவலைக்கடலில் ஆழ்த்துகின்றது; அவர் களின் வலிமையைக் குறைக்கின்றது; மனச் சோர்வைத் தருகிறது. ஆயினும், கடன் ஓர் நற்குரு. அதனுழிப் பிறக்கும் நீதிகள் இழித்தற்கில. கடனுற் கலங்கும் எவர்க்கும் அந் நீதிகள் பெரிதும் வேண்டும். பரவலாய் விழுந்தக்கால் மறு நாள் காற்றினுல் குப்பல் குப்பலாய் குவிக்கப்பெறும் பனியை யொத்த பொருள்., கடிகாட்டிப் பொறியின் எண்காட் டுறுப்பைபோன்று, உட் பொறியின் மேற்குறியாம். மாந்த ரின் அறிதகமைக்குப் பயிற்சிக் கூடமாகவிருந்து, வருங்காலத் திற்குரிய ஆழ்ந்த நியதிகளைச் சேமித்துவைக்குந் தேன் கூடு.

5. ஒவ்வொருவரின் குணமும், நிலைமையும், அறிதக மையின் மிகச் சிறு பேதத்தாலும் மாறுபடுகின்றன; வேற் றுமையை யுணர்வதில் இவ்வுண்மையைத் தெளிவாய்க் காணலாம். பொருள்கள் குவிந்தும் அடுக்கியும் நின்றில; பிரிந்தும், தனித்துந்தான் உள வென்று மாந்தர் அறிவ தற்கே, இடமும் காலமும் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு மேழியோ அல்லது ஒரு மணியோ, ஒவ்வோர்வகைப் பயனுடைத்து. ஒன்று மற்றொன்றின் பயனைத் தருதலிய லாது. நீர், அருந்துவதற்காயது; நிலக்கரி எரிப்பதற்காயது; கம்பளம் உடுப்பதற்காயது; கம்பளத்தை அருந்தவோ, நீரை நூற்கவோ. நிலக்கரியை உண்ணவோ பொருந்தாது. அறிவாளியின் ஞானம் பொருளின் பிரிவினை, படித்திறம் காண்பதில் வெளியாகின்றது; அவனின் சீவராசிகளின் வகுப்புவாரியும், திறமையும், இயற்கை எவ்வளவு பரப்

புடையதோ அவ்வளவு பரப்புடையது. முழுமகனுக்கோ சீவராசிகளைத் தொகுத்தலோ, வகுத்தலோ, இல்லை; ஒன்று மற்றொன்றைப் போன்றுதான்; ஒருவன் மற்றொருவனைப் போன்றுதான்: அவனுக்கு நன்றல்லாதது முதிர்ந்த தீமை; வெறுப்பில்லாதது நிறைந்த நன்மை.

6. இயற்கை, இவ்வண்ணம் மாந்தர் பால் என்ன நன்மையைக் காண்கிறது? மனிதன் பிழையை, இயற்கை யணங்கு பொறுப்பதேயில்லை; அவளுக்கு உண்டு உண்டு தான்; இல்லை, இல்லை தான்.

7. வேளாண்மை, வானூல், உயிர்நூல் முதலாய, நூல்கள் இயற்கை யணங்கின் தாயக் கட்டைகள்; மிகுநிறை யுடையன; இயற்கையின் குவியல்களிலும், குப்பைகளிலும் பயனுடைப் பல மறைந்து கிடைக்கின்றனவென்று எண்பிக் கின்றன. எவ்வளவு அமைதியாயும் இன்பமாயும் மன மானது பூதனூலின் சட்டதிட்டங்களை யுணர்கின்றது! படைப்பின் மாண்பை யுணருங் காலத்து நேர்மையான மனவெழுச்சி உண்டாகின்றதன்றோ! மனிதனின் அகப் பார்வை தூய்மையுறுகிறது; இயற்கையினெழில் அவன் அகத்தே ஒளி வீசுகின்றது. இப்பான்மையை யுணரக் கூடும் பெற்றியினால் மனிதன் அண்டத்தைவிட உயர்வுறு கிறான்; அவன் பெருமை ஏறுகிறது; என்னையெனின், காலம் இடம் இவற்றுலாய அண்டத்தின் உறவு அதன் பாலுள்ள நியதிகளைக் கற்கக்கற்க, மறைந்தொழிகிறது.

8. இவ்வாறு அண்டத்தின் எல்லை, புறக்கண்ணின் வழி சிறுகினும் அகக்கண் வழி விரிவுறுகிறது. அவ்வளவிலா அண்டத்தின் பால் மனம் பதிந்து நிற்கிறது: நடுக்குறு கின்றது. "நாம் அறிந்தது நாம் அறியாததில், ஒரு முந்திரியே." ஒளி, வெப்பம், காந்தம், மின்சாரம் உடலியல், புவிஇயல் முதலியவைகளைப்பற்றி நாள்தோறும் வெளிவரும் உண்மைகளை நோக்கின் அந்நூல்கள் பயக்கும் ஆர்வத்தின் கரையைக் காண்பவர் யார்?.

9. இவ்வாருக, இயற்கையின் ஒழுக்கப் போதனை, பலவாயினும் அவற்றுள் இரண்டைப்பற்றி ஈண்டு கூறுவது அவசியம்.

10. ஒவ்வொரு நிகழ்ச்சியும், மனத்திட்பத்தையோ அல்லது வல்லபத்தின் நீதியையோ கற்பிக்கின்றது. ஒவ்வொரு குழவியும் ஐம்புலன்களின் நுகர்ச்சியை ஒன்றன் பின் ஒன்ருய் அடையுங் காலந்தொட்டு, 'உன் எண்ணமே நிறைவேறும்,' என்று சொல்லும் வரையில், சிறு நிகழ்ச்சிகளன்றி, பெருநிகழ்ச்சிகளையும், தன் மனத்திட்பத்தால் தன் வழிப்படுத்தக் கூடுமென்ற மறைபொருளை யுணர்ந்து, எல்லாச் செயல்களையும் தன்குணத்திற்கு ஒத்துநிற்கும்படி செய்கிறது.

11. பிறர்பயன் கருதுவதே இயற்கை மாதின் இயல்பு. அவள் முற்றிலும் ஒரு இடையாளியே. மூட்டையைப் பொறுமையுடன் சுமந்து செல்லும் நீள்செவியனைப் போல், மனிதவுலகைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்கிருள். தன் நாடு முழுவதையும் அவன் தனக்குப் பயன்படுமாறு அமைத்துக் கொள்வதற்கு இணங்குகின்ருள். அவனும் அவ்வாறு செய்துகொள்வதில் களைப்புறுதலேயில்லை; இசையும், ஞானமும் ஊறும் மொழிகளுள்ளே எழும் நுண்ணிய ஒலியை மறந்து, அவைகளுக்கு சொல்வன்மை, ஆட்சி என்ற இருசெட்டைகளைப் பொருத்தி வெளிவிடுகின்ருன்; ஒன்றன்பின் ஒன்ருய் அவன் பேரெண்ணங்கள் வெளிப்புலர்ந்து, உலகமுழுதும் 'அவன் வசப்பட்டது' என்று ஏற்படும் வரை பொருளை வகைப்படுத்துகின்றன; 'உலகம் நானே', என்ற முடிவைத் தோற்றுவிக்கின்றன.

12. தோற்றப்பொருள்கள், பகுத்தறிவின் முறைக்கு ஒத்து, 'மனமணியை' ஒலிக்கச் செய்கின்றன. எப்பொருளும் நெறியுடைத்து; அவைகளின் எண்ணற்ற மாறுபாடுகள் ஆன்ம வியற்கையை ஓயாது இலங்கச் செய்கின்றன. ஆனதுபற்றி, இயற்கை, உருவத்தாலும், நிறத்தாலும், அசைவாலும், பெருமாண்புடையது. அண்டத்திலுள்ள ஒவ்வொரு கோளமும், கரட்டுப்பளிங்கு ஆதியாக வாழ்க்கை நியதிகள் ஈருகவுள்ள, ஒவ்வொரு ரசாயன மாறுபாடும், செடிகொடிகளின் முளை தொட்டு, கொடு வெப்பநாட்டு அடவிகள், புவிபொழி வெள்ளத்திற்கு முன் உண்டான நிலக்கரிச் சுரங்கங்கள் வரை, பயிர் பச்சையிலுண்டாகும் பேதமும், கடற்பஞ்சு முதல் அரக்கர் ஈருக உள்ள சீவராசி

களின் புலன் வழிச்செயலும், "நன்று இது, தீது இது" என்னும் நியதியை குறிப்பாகவோ, இடி முழக்கமாகவோ அறைகின்றது. ஆதலால் இயற்கை, மதத்தின் நீங்காத் தோழன்; மதவுணர்ச்சிக்குத் தன் நிதி, பெருமை, யாவற்றையும் தந்து உதவுகின்றது. மதாச்சாரியர்களும், குருக்களும் இயற்கையருவியின் நீரைப் பருகினவர்களே. இவ்வொழுக்கமுடைமை, இயற்கையின் அணுவு ஒவ்வொன்றிலும், நரம்பிலும் என்பிலும் ஊடுருவிப் பாய்ந்துளதென்பதைப் போதிப்பதே, இயற்கையின் முடிவு எனத் தேர்தல் பொருந்தும். எவ்வெவரின் எண்ணத்தை எவ்வாறு நிறைவேற்றினாலும், ஒழுக்கமுடைமையைப் போதிப்பதுதான், குவலய முழுதும் பரவி நிற்கும் தொழிலாகும்; அதை யுணர்த்தாதிருப்பது ஒருபோதுமில்லை. ஒரு முறை கையாண்டவளவிலே இயற்கையின் செல்வம் குறைவுறுதலுமில்லை.

13. ஒரு பொருள் ஒருவருக்குத் தன்னாலியன்ற அளவு பயனைத் தந்திடினும், இறுதிப்பயனை நாடுங்காலத்து, அது புதியதொரு பொருளாகவே வந்து நிற்கும். முடிவிலாவிடத்து, ஒவ்வோர் முடிபும் மற்றொரு முடிபிற்கு வழியே. பொருளின் பயன், மற்றொன்றோடு இணைத்துப் பாராவிடில், அற்பமாயும், அழுக்காயும் தோன்றும்; ஆனால், அகக்கண்ணால் நோக்குமிடத்து, பலன் என்ற துறைக்குப் போதகர்; பொருளின் சிறப்பு அதன் பயனளவுதான். ஓர் முடிவை நாடுவது, இயங்கும் எப்பொருளுக்கும் இன்றியமையாதது; பொருளிலும், உணவிலும், பொருளின் நிறையிலும், விருப்பத்திலும், விலக்கமுடியா வெறுப்புடன் நாம் அடையும் பயிற்சியே இவ்வுண்மைக்கு நிறைந்த சான்றாம்.

14. இயற்கையின் செயல் ஒவ்வொன்றும் ஒவ்வோர் நீதியை வெளிப்படுத்தும் பண்பு, மேற்கூறியவற்றால் நன்கு விளங்கும். நீதிச்சங்கின் தொனி, இயற்கை வட்டத்தின் நடுவே நின்று, சுற்றுக்கோடு வரை பரவுகிறது; அது ஒவ்வொரு பொருளின் தசையும் என்புமாம், உறவுமாம், செயலுமாம். நாம் உறவுகொள்ளும் ஒவ்வொரு பொருளும் நமக்குப் போதகர். காணும் பசுங்கழனி அப்பான்மையதே; உமியும், கோதுமையும், பூண்டும் செடியும், மழையும் பூச்சியும், பயிர்

நோயும், ஞாயிறும், இளவேனிற் காலத்துப் படைசால் தொட்டு, முன் பனிக்காலத்துத் தாள் குவியல் வரை ஒரு தெய்வக்குறியே. மாலுமி, ஆயர், சுரங்கப்பணியர், வணிகர் யாவரும் அவரவர் துறையிலும் அதேயனுபவமும் முடிவும் காண்கிறார்கள். காற்றில் பரிமளித்தும், வித்தில் முளைத்தும், நீரிற் கலந்தும், நிறைந்தெழும் இந்நீதியுணர்ச்சி, மாந்தன் கைசிக்கி அவன் உளக்கடலில் ஆழ்கிற தென்பதில் சிறிதும் ஐயமில்லை. ஒருவன் மாட்டு இயற்கையாலுண்டாகும் ஒழுக்கமுடைமை, அது அவனறிவிற்கு விளங்கிய அளவுடைத்து. இதன் அளவை, யார் அளவிடக்கூடும்? அலைமோதிய வரை, பரதவர்க்கு ஊட்டும் மன உறுதியை எவ்வளவென்று யார் ஊகிக்கக்கூடும்? காற்றினால் துய்க்கப்பெறும் கருமுகிற் கூட்டங்கள் மாசிலா நீலவானைச் சிதைக்காது ஒலித்துச் செல்லும் பான்மை, மாந்தர் மனத்து எழுப்பும் மனவமைதி எத்தகையது என்பதை யார் நிறுவக்கூடும்? பிராணிகளின் மூகம், நம்பால், மடியின்மை, தெய்வத்தன்மை, நேயம் முதலியவற்றை எழுப்பவில்லையா? பல்வகை உடல் நல இயற்கை நிகழ்ச்சிகள், ஒருவனின் 'ஐந்தவத்தைக்கு' அருங் குருவன்றோ!

15. எங்குமிலங்கும், இயற்கையி னொற்றுமை, வேற்றுமையில் ஒற்றுமை, இங்குதான் திகழ்கின்றது. அளவிலாப் பேதப் பொருள் யாவும் இதே தேற்றத்தை உள்ளத்திடையுறுத்துகின்றன. ஸனபோன் (Zenaphon) தன் முதுமையில், 'எங்கு நோக்கிடினும் எல்லாப் பொருளும் ஒன்றையே நாடிச் செல்கின்றன" என்று கூறினார். எண்ணிலாத் தோற்றங்களினடயே ஒன்றே தோன்றுவதைப் பார்த்துப் பார்த்து அயர்ந்தார். இலையென்ன, துளியென்ன, பளியுப்பென்ன, நொடியென்ன இவை ஒவ்வொன்றும் முழுதின் அணுவாய், முழுதின் நிறைவை அனுபவிக்கின்றது; ஒவ்வோர் அணுவும் ஒவ்வோர் சிற்றுலகு; பேருலக வயத்தது.

16. வீடமைத்தல் 'உறைந்த இசை' யென்று ஒரு பெரியார் கூறுகிறார். 'வீடமைப்போன் ஓர் பாடகன்' என்று மற்றொருவர் எண்ணினர். கோல்ரிட்ஜ் என்ற ஆங்கிலக்கவி 'காதிக் மாதாகோவில் கல்லால் அமைந்த மதம்' என்றார். சில அறிவாளிகளின் சொல்வன்மை. மான்,

யானை, நாகம் முதலியவைகளின் செல்லுகையைக் குறிப்ப தோடு நில்லாமல், நிறங்களையுங் காட்டும் மாண்புடையது. ஒத்த ஓசை ஒத்த நிறங்களில் எழுகின்றது. ஓடும் ஆறு தன் மேல் வீசுங்காற்றை யொக்கும்; காற்று நுண்ணிய ஓட்டத் துடன், தன்னை யூடுருவிச்செல்லும் ஒளியை யொக்கும்; ஒளியோ இடங்கொண்டு தன்னுடனே வரும் வெப்பத்தை யொக்கும். ஒவ்வொரு சீவனும் மற்றொன்றின் சிறுமாற் றமைப்பே. அவைகளுக்குள் வேற்றுமையைவிட ஒற்று மையே மிகுதி; அவைகளின் அடிப்படைக்கோடு ஒன்றே. இவ்வொற்றுமையை இலகுவாய் யாவருங் காணலாம். இயற்கையில் எப்பாகத்திலும் அது பொதிந்துள்ளது; புவிக்காரணியே தனக்குத் தாய் எனக் காட்டுகின்றது; என்னையெனின் அது எண்ணத்திடையும் பரவியுளது. விளம்பப்படும் ஒவ்வொரு பேருண்மையும் மற்றோருண்மை யைத் தன்னகத்துளது; கோளத்தில் எல்லாவகை வட்டங் களையும் தன்னுள் கொண்ட பெருவட்டம் போன்றது அவ்வொற்றுமை; அவ்வாறுய உண்மை ஒவ்வொன்றும் முடிவிலானை ஒரு திசையிலிருந்து பார்ப்பதாகும்; ஆனால் அது பல பக்கலுடைத்து.

17. இவ்வொற்றுமையிலும் ஆதார ஒற்றுமை, செயல்க ளிடத்துக் குன்றிடைதீபம். மொழிகள் மனக்கடலின் முடிந்த வுறுப்புகள்; உண்மையின் அளவை அவை முற்றிலும் காண் பியா; அவைகள் அதை, உடைத்தும், துண்டித்தும், மெலி வுற்றும் நிற்கச்செய்கின்றன. ஒழுங்குடைச்செயல், கண்ணைக் கவர்ந்து, இயற்கை யாவற்றோடும் உறவு தோன்ற நிற்கும். ஞானி ஒன்றை நிகழ்த்தும் போது யாவையும் நிகழ்த்து கிறுன்; அல்லது நன்றே செய்யும் ஒன்றில் எல்லா நன்றையும் காண்கிறுன்.

மொழியும் செயலும் மிருகவியற்கைக்குரிய குணமல்ல. எல்லா உருவமும் கீழ்த்தரமே என்று காட்டும் மனித உருவத் திற்கு நம்மை அவை அழைக்கின்றன. சூழ்ந்துள்ள பலவற்றி னிடையே இவ்வுருவம் தோன்றும்போது, ஆன்மா, மற்ற உருவங்களைத்தள்ளி இவ்வுருவைப் பற்றுகிறதுபற்றி, "இதி லிருந்துதான் என் இன்பமும் அறிவும் பெறப்படுகின்றன; "நான் யார்? எனக்கண்டறிகிறதும் இதிலிருந்துதான்;

அதனுடன் உரையாடுவேன்; என்னுடன் அது பதில் உரையாடும்; அது என்னுள் உதித்த எண்ணங்களைப் பண் படுத்தும்" என்று பகர்கிறது. ஐயமின்றி அகக்கண்ணே, இவ்வுருவங்கள்—ஆணும் பெண்ணும்—ஓயாது தொடர் கின்றன. பொருளில் ஆழ்ந்து நிற்கும் வலிமையையும் வரிசையையும் பற்றி, கிடைக்கக் கூடிய இணையிலா அருங் கருத்துகள் இவையேயாம். ஆனால் அந்தோ! அவை ஒவ் வொன்றும் ஒரு சிறிதாயினும் தீங்கிடைப்பட்டுக் காண் கின்றது; அதனால் கேடுற்று, மேற்பார்வைக்கு குறைவுபட்டு நிற்கின்றது. எனினும், அளவிடப்படா எண்ணக் கடலிற்கும் நற்குணங்களுக்கும், ஊற்றுக் சுழாயாகவும், யாவகை முயற் சிக்கும் திட்டங்களுக்கும் வாயில்களாகவும் நிற்கின்றன.

18. மாந்தரின் கல்விக்கு அவை எவ்வகையில் என்ன அளவு பயனுடைத்து என்ற கருத்தை ஆராயப்புகுவது பெருங்களிப்பை விளைவிப்பதொன்றும்; ஆனால் எப்போது? எங்கே முடிவுறும்? நம் இளமையிலும் முதுமையிலும், வானைப் போலும், நீரைப்போலும், நம் நோக்கத்தோடு இயைந்து நிற்கும் நண்பர்களைக் கொள்கிறோம்; அவர்கள் நம்பால் எழும் ஆன்மக் காட்சி, ஆன்ம அறிவிற்கு உட்பட்டு, நம் அவாவை நிரப்புகிறார்கள். ஆனதுபற்றி, அவர்களை-உள்ளவாரறிதற்கேற்ற தூரத்தில் வைக்க இயலாதவராய், அவர்களைத் திருத்தவோ,ஆராயவோ முடிவதில்லை;அவர்களை நேசிப்பது தவிர, வேறொன்றும் செய்வதற்கில்லை; நெருங்கிய பழக்கத்தின் பயனாய், ஒரு நண்பனால் தந்த உயர்ச்சியினளவு வழியாய், நம் பெருங்கொள்கைகள் (Ideals) பண்புறும் பொருட்டு, உண்மையான அவ்வொருவனை அனுப்பிய எல்லா வல்லமையுடைய ஆண்டவன் பால் மோகமுறுவது, அவ்வாறாய ஒருவன் நம் எண்ணத்திற்கெல்லாம் ஊற்றுக் குழியாய் நிற்பது, அவனின் குண மேம்பாடு, தன் பயன்களை நம் பால் நாம் காணாது நிலைநாட்டுவது, அது உளத்திடத்தே பெரு ஞானப்பொருளாய் மாறுவது, முதலாய நிகழ்ச்சிகள் "அவன் வந்தவேலை முடிவுறுகிறது விரைவில் நம்மைவிட்டு நீங்குவான்," என்பதற்கு அடையாளம்.

"ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்"

—எமர்சன்

## 2. மூன்று இயற்கைப் பொருள்கள்

1. காணப்படும் பொருள்களெல்லாம், இயற்கைப் பொருள் செயற்கைப் பொருள் என இருவகையிலடங்கும். இறைவன் ஆணையால் ஏற்படும் பொருள் இயற்கைப் பொருள். அப்பொருளை ஆதாரமாகக்கொண்டு, மானுட வலிவால் தோன்றும் பொருள்களெல்லாம் செயற்கைப் பொருள்கள். நிலம், நீர், தீ, ஞாயிறு, திங்கள், மீன், மலை, நதி, மரம், செடி, கொடி, பறவை முதலியன இயற்கைப் பொருள்கள். வீடு, மேசை, நாற்காலி, புகைத் தேர், மரக்கலம் முதலியன செயற்கைப் பொருள்கள். ஆகவே, இப்புவியில் இயற்கைப் பொருளும், செயற்கைப் பொருளும் எண்ணிறந்தன.

2. இனி, இவ்விருவகைப் பொருள்களையும் இயற்று வார் வலிமையை மேலெழுந்த வாரியாய் நோக்குமிடத்துச் சற்றேறக்குறைய சமமாகத் தோன்றலாம். ஆனால், ஊன்றி நோக்குவார்க்கு நிறைந்த பேதம் வெளியாகும். இறைவனு லான பொருள்களெல்லாம் "உயிருள" "உயிரில" வாய் அமையும்; மனிதராலான பொருளோ "உயிரில" வகையே அமையும். அதுவுமன்றி, இயற்கைப்பொருள் பலவற்றுள், ஒரு மிகச் சிறு பொருளையேனும், மானுடவலிவால், எத் திறமைத்தானும் இயற்றுதல் ஒண்ணாது. ஆதலான், ஆண்ட வன் அருந்திறத்தைத் தெளிவுறக் காண்டற்பொருட்டு அவன் வலி வழித் தோன்றிய மூன்று பொருள்களை நோக்கி, அவற் றுள் பொதிந்து கிடக்கும் உண்மைகளை ஆராய்வது இங்கு நோக்கமாகும்.

3. அம் முப்பொருளில் முதல் நிற்பது ஒரு மிகச் சிறு பொருள். "உயிரில" வகையிலடங்கும்; அதைவிடச் சிறு பொருள் இல்லையெனலாம்; அது எத்தேயத்திலும் உளது. உலகம் தோன்றுமுன் தோன்றிய ஒளிவழிப் பிறப் பது. ஒளிவழி வளர்வது; ஒளிவழி நிறங்கொள்வது; ஒளி வழி இறப்பது; மெல்லுடலுடையது; நறுமணம் பெற்றது; இறைவன் பணியாற்றி வைப்பது; கண்ணுறுவார் எவரும் விரும்பும் நலம் பெற்றது; எழில் மிக்குடையது. ஆனால்,

மிகக் குறுகிய வாழ்நாளையுடையது; இதைவிடக் குறைந்த ஆயுளையுடையது ஒன்றுமில்லையென்றே கூறலாம். அஃது பூ என்னும் ஓரெழுத்தொரு மொழியாகும்.

4. இப்பன்னலம் பெற்ற பொருள் மிகச் சிறுபோழ்தே இருத்தலை நினைக்கின், மனந்துயருறவேண்டும். ஆனால் அதனை அமைத்த அவனே வேறு எதையோ எண்ணியுளன்போலும்! இச் சிறுபோழ்தில், கிடைத்தற்கரிய பெரும் புகழ் அடையுந் தன்மையை அதனிடத்தே பெய்துளன். அன்றியும், படைப் புப் பொருள் யாவற்றிலும் முதற்பொருளாய் இப்பொருள் ஆடவர் தலைமீதும் பெண்மக்கள் தலைமீதும் உறையும். இந் நிலைமை வேறு எப்பொருளுக்கும் ஏற்படுவதாகத் தோன்ற வில்லை. வான், மறை, மலரோன், மால், உருத்திரன் முதலி யோர் காணாத, "கதிர் பரப்பி விளங்குகின்ற கண்ணிறைந்த சுடரை," இச் சிறு பொருள் பிறந்த சிறு பொழுதுக்குள் அடைவதென்றால், அதன் பெருமையையும் புகழையும் எடுத்து வரைவது இயன்றதல்ல. "அளவையெலாங் கடந்து, மனங்கடந்து, மற்றறிவையெலாங் கடந்து, அண்ட பிண்டமெலாங் கடந்து நிறைவான சுகக் கடலில்," சுகித் திருக்கும் இப்பூவின் பெருநிலையைக் கண்டு, ஆறும் அறிவைப் பெற்ற மானுடன், தன் அகம் அழிந்து, அகங்காரம் களைந்து ஆண்டவனின் தாளை 'என்று' அடைவோமென்று, "நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து," நிற்றல் வேண்டும். மெல்லுடலுடையதாய், பலரும் விரும்பும் நலம் பெற்றதாய், நன்மணம் வீசுவதாய், வனப்புடையதாய், பிறந்த சிறுபோழ்தில் பேரின்பவீட்டை அடைவதாயுள்ள இச்சிறு பூ, தனக்கெனவாய்த்த ஆறும் அறிவைப் பெற்றிருக்கும் மனிதன், தனக்குரிய சின்னாளில், தீமையெலாங் களைந்து, யாவர்க்கும் இனிமையே பயந்து, அதன் வழிப் பெரும் புகழ் தேடி, இடர்நீக்கும் பெருமானைப் போற்றிப் பிறவியொழிக்க வழிதேடி நிற்றல், அவனது பெருங் கடமை யென்று ஓது கின்றது.

5. ஓரெழுத்தாலாய ஒரு சிறுபொருள் கூறுவது இன்ன தென்றுணர்ந்தோம். இனி ஈரெழுத்தாலாய மிகப் பெரும் பொருள் கூறுவது இன்னதென்று ஒரு சிறிது ஆராய்வோம்.

கட்புலனே நுகர்வதாயுள்ள, வான், ஞாயிறு, திங்கள் முதலிய வைகளை விடுத்துக் கட்புலனும் மெய்யும், அனுபவிப்பதா யுள்ள பொருள்களில் மலைதான் பெரிது. இதைவிடப் பருத்த பொருள் ஒன்றுமில்லை. பண்டைநாளில், மூதறிஞர்கள்—எந்நாட்டிலுஞ் சரி—மலையின் உச்சியைக் கடவுளுக்கு உறை விடமாக ஆக்கியிருப்பதை எல்லாச் சரித்திரங்களிலும் காணலாம். யாது காரணம்பற்றி இதனை வீடாக அமைத் தனர்? கடவுள் யாவரையும் யாவற்றையும்விடப் பெரியவர் என்பதற்கு அறிகுறியாகவா? அவரை அடைவதென்று புறப்பட்டார்க்கு, அவர்பாற் செல்லும் வழி, முள் நிறைந் தது; புதர் நெருங்கியது; செடிகொடி படர்ந்தது; தீங்கிழை மிருகங்கள் சில இடைப்பட்டது, நஞ்சுடை ஊர்வன பல பரந்துள்ளது; நேர்வழியிலாதது; சுற்றுவழியேயுளது; என்ப வாய இடையூறுகட்கெல்லாம் மனஞ்சலியாது, அவைகளைக் கடந்து, துணை யாரும் இலனாய்ச் செல்லவேண்டுமென்பதற் கறிகுறியாகவா? நெறி நூல்கள் யாவும், 'பரமனின் தாளை அடைவதற்குப் பல்கோடி காலம் கடுந்தவம் இயற்றியும், அடைதற்கு இலராய் வருந்தும் பெரியோர்கள் பலருளர்,' என்று முறையிடுகின்றன. இப்பேருண்மையைச் சாதாரண அறிவைப் பெற்ற மக்களும் இலகுவாக உணரும்பொருட்டு, மலையின் வாயிலாக உருவகப்படுத்தி யிருக்கலாமென்று கூற லாமா? 'ஆம்' எனின் 'கடவுளே பெரியர்' 'எட்டுதற்கரி யவர்' என்ற உண்மையை எடுத்துக்காட்ட மலையைக்காட் டிலும் சிறந்த பொருள் யாது?

6. கட்புலன் வாயிலாகக் காணப்படும் அவரின் பெருமை இவ்வாறிருக்க, அதன் பயன்வழி அவரின் பெருமையை ஒரு சிறிது ஆராய்வோம். புவியின்கண், வான் வெளியின்றேல், மனிதன் வசிப்பதற்கு ஏற்றவிடமாகப் பூமி இருத்தல் இயலாது. மலைகள் இன்றி ஆகாயம் தூய்மை பெறாது. நதியின் ஓட்டம் தடையுறும். பூமியின் அநேக பாகங்கள் சமவெளியாகவோ சதுப்பு நிலமாகவோ ஆக வேண்டிவரும். மலையின் அமைப்பை ஆழ்ந்து நோக்குபவர், மனிதரின் நெஞ்சம் எவ்வகையாலும் தூய்மை பெறுவ தற்கும் தூய்மை பெற்றவழி இன்பம் நுகர்வதற்கும் வேண்டியவாறு ஆக்கப்பட்டிருப்பது தெளிதல் கூடும்.

7. சுருங்கக் கூறுமிடத்து, மனிதன் உடல்நலனையும், உளநலனையும் பெருக்குவதற்காக மலைமுத்தொழில் கொண்டுளது. நீருக்கு அசைவு கொடுப்பது மலையே. நீரின் இவ்வசைவு ஒழிந்தால் நாட்டிற் குண்டாகும் கெடுதிகள் பலவென்பது வெளிப்படை. முக்கியமாகத் தேயத்தில் வசிப்பதற்கும், ஏற்ற சமவெளிகள் அமைந்திருப்பது இத்தொழிலினுல் தான். ஆதலால் இது அதன் முதற்றொழில். மலைகள் கதிரவன் ஒளியை ஒருபாகத்தில் மிகுதியாகப் பெற்று, மற்றொரு பாகத்தில் சிறிதே பெற்று, நாட்டின் குளிர்வெப்பநிலைக்குக்காரணமாய் நிற்கின்றது; மாகாணமாகவும், கோட்டமாகவும் நாட்டைப் பிரிவினை செய்வதும் இதற்குடையது. மூன்றுந்தொழில், நிலத்தின்பாலுண்டாகும் இடையரு மாறுபாடாம். இத்தொழிலின்றி உழவுத்தொழில் பயனுருது. நாளாவட்டத்தில் பூமியின் சாரம் குறைந்துவிடும். உழவர்கள் ஆழமாக உழுது மண்ணை மேலுங்கீழுமாகப் புரட்ட வேண்டும். இவ்வுழைப்பு எளிதல்ல. கருணையே வடிவு கொண்ட இறைவன் இவ்வேலையை மலையின்பால் வைத்துளன். மலையின் மேற்பரப்பில் சிறுசிறு கல்துண்டுகள் ஏற்பட்டு, அதினின்றும் இழிந்து வரும் நதிகள் அவைகளை மிகப் பொடியாக்கி, வளஞ்செறி பொருளாய் நிலத்திடைப் பரவச் செய்து பூமியைப் புதுப்பித்துக் கொண்டே வருகின்றன.

8. இவ்வாருக நிலம், நீர், காற்று இம்மூன்றிற்கும் ஏற்படும் அசைவும் மாறுதலும் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாதன. உயிரில்லாதனபோல் காணும் மலைகள் உலகின் உயிருக்கே இருப்பிடமாக ஏற்படுகின்றன. பள்ளத்தாக்குகள் ஜீவராசிகளை உண்பிக்கின்றன. மலைகளோ உண்பிப்பதோடுநில்லாமல், அவைகளைக் காப்பாற்றி மேன்மேலும் பலப்படுத்தி வருகின்றன.

9. இனிக் கருணைத் தடங்கடலாகிய பரமனையே, சமயநெறி வளர்த்த பெரியார் ஒருவர், 'குன்றேயனையாய்,' 'குணக்குன்றே' 'கல்லார் அறியா மாணிக்கமலையை', "மகேந்திர மாமலை மேலுறையுங் குரவா," என்றும்; சமீபகாலத்தில் இருந்த பெரியார் ஒருவர், "ஆதிமலை, அனாதிமலை, அன்புமலை, எங்குமானமலை, ஞானமலை, ஆனந்தமலை, வான்சோதிமலை,

துரியமலை, துரியமுடிக்கப்பால் தோன்றுமலை, தோன்றாத சூதானமலை வெண்பூதிமலை, சுத்தவனுபூதிமலை, எல்லாம் பூத்தமலை, வல்லியெனப் புகழுமலை, தனையோர் பாதிமலை, முத்தரெல்லாம் பற்றுமலை", என்றும், "சாக்கியனு ரெறிந்த சிலை சகித்தமலை, சித்தசாந்தருளஞ் சார்ந்தோங்கித் தனித்த மலை, சபையிற்றாக்கிய காலொடு விளங்குந் தூயமலை, வேதஞ் சொன்னமலை, சொல்லிறந்த துரியநடுமலை, வான் ஆக்கியளித் தழிக்குமலை, அழியாதமலை, நல்லன்பருக்கு இன்பந்தருமோ ரற்புதப் பொன்மலை, நற்பாக்கிய மெல்லாமும் பழுத்தமலை," என்றும், அறையும் பெருமொழிகளைச் சிந்திக்கின், பரம னுக்கு மலையை வீடாக அமைத்த மூதாதையர்களின் விசாலித்த நுண்ணறிவு எத்தன்மைத் தென்றும், கடவுள் எத்தன்மையரென யாவரும் எளிதில் உணரும் பொருட்டு உவமானமாக எடுத்துக் காட்டுவதற்கு மலையைக் காட்டிலும் சிறந்த பொருள் வேறில்லை யென்றும் நன்கறியலாம்.

10. மேற்கூறியவைகளிலிருந்து மலையின் பெருமையும் பயனும் வெளிப்போந்தன. பயன் பலவற்றுள்ளும் மலை யிடைப்பிறந்தவுடன் வேகமாக இழிந்து, சமநிலத் திடைத் தவழ்ந்து, தேயத்தின் செல்வத்திற்கெல்லாம் கருவி யாய் மிளிர்ந்து வரும்நதி முதலிடம் பெற்றதாம். நதியைப் பார்க்குமிடத்து உயிரிலபோன்று அசைவற்று நிற்கும் மலையாகிய இறைவன், சமநிலத்திடையே பரவிக்கிடக்கும் மானுடர்களும் மற்று உயிர்வாழ்வனவும் உய்யும் பொருட்டுத் தன்னிருப்பிடம் விட்டு, வேகமாக மலையின்றிறங்கி, மக்க ளிடையே வந்தக்கால், தவழ்ந்து சென்று எங்கும் வளஞ் சொரிவான் கருதி, நீருருக்கொண்டு, நிலமெங்குந் திரிந்து, தன்கருணையைப் பரப்புவதற்கு எழுந்து வந்துளன் என்று கொளல் மிகப் பொருந்தும். நதியின் பயன் பல. அவை களைப் பெரிதும் பெரும்பாலரும் உணர்வர். ஆகவே, அவை களை விடுத்து, சீவன், இறைவன் தாள் அடைந்த காலை எந்நிலையிலிருக்கும் என்ற தன்மையைத் தெளிவுறக் காட்டும் இயல்பு அதனிடத்துளதால் அஃதொன்றையே இங்கு எடுத்துக் காட்டுவாம்.

11. கொண்டுவந்த செய்பொருளை எல்லாம், "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்றபடி வேண்டுவார்க்கெல்லாம் கொடுத்து, நாடெல்லாம் வளம்படுத்தி இறுதியில் அங்கங் குறுகிக் கங்கு கரையில்லாத கடலை அடைகின்றது. கடலுடன் கலக்கும் இடத்தை ஊன்றிப் பார்த்தால் பேருண்மை யொன்று விளங்கும். கடலிலுள்ளதும் நீர், ஆறுகொணர்ந்ததும் நீர். ஆயினும் இரண்டும் கலந்தவிடத்து வேற்றுமையாகவே நிற்பதைக் காணலாம். ஆனல் அதைப் பிரித்தல் எவ்விதத்தினும் இயலாது. இரண்டு பொருளாகத் தோற்றினும், பிரிக்கவொண்ணுவகையில் ஒரு பொருளே. இந்நிலைதான் 'இரண்டறக் கலத்தல்' என்னும் பெருமொழியை ஐயமற விளக்குகின்றது. இச்சொற்றொடரை விளக்குவோர்கள் 'இரண்டுமில ஒன்றுமில' என்று கூறுகின்ருர்கள். இம்முத்தி நிலையை வேறு எந்தப் பொருள் எடுத்துக் காட்டுகின்றது?

12. மற்ருெருவகையில் ஆற்றுநீர், தான் பிறந்த இடத்தையே இறுதியிலடைகின்றதெனக் கூறலாம். பிறந்தவிடம் கடல். கடலோ, கங்குகரையில்லாமைபற்றிக் கடவுளுக்கு அறிகுறியாக நிற்கின்றது. பரவைநீர், ஞாயிற்றின் வெப்பத்தால் ஆவியாக மாறிப் பிறகு சிற்சிறு திவலைகளாகமாறி, பரமனுக்கு உறைவிடமாகிய மலையிடஞ்சென்று, ஒன்ருகக் கூடித் திரண்ட நீராகக் கீழ்நிலத்திடை வந்து, பிறர் நலனுக்கெனவே பொறுமையுடனிருந்து, திரிந்து, கடவுள், ஆதி முடிவு என்பன இல்லாதவர், எங்கும் நிறைந்தவர், எல்லையற்றவர் என்பதைக் காட்டும் பெருங் கடலை அடைகின்றது.

13. அதுபோன்று, புவியிடையே தோன்றும் சீவன் ஒவ்வொன்றும், தன்னலம் முற்றிலும் மறுத்துப் பிறர் பெரும் பயன் காணுதலே ஆக்கைக் கழகு என்று உணர்ந்து, அவ்வழி நின்ற காலை, "இரண்டுமில ஒன்றுமில" என்று சொல்லும் பேரின்ப நிலையை அடையும் என்பதைக் காண்க.

—நூலன்

# PART II

## உள்ளுரை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இளமையும் முதுமையும் | ... | 21 |
| 2. | பெற்ருேரும் மக்களும் | ... | 23 |
| 3. | மணமும், மணமின்மையும் | ... | 25 |
| 4. | பழக்கமும் கல்வியும் | ... | 27 |
| 5. | நற்சொல்லும் நற்பழக்கமும் | ... | 30 |
| 6. | தோழரும், நட்பினரும் | ... | 32 |
| 7. | பேரும் புகழும் | ... | 34 |
| 8. | உடல் நலம் பேணல் | ... | 36 |
| 9. | மிர்ஸா கண்ட காட்சி | ... | 38 |
| 10. | கற்பிக்க வேண்டியவை யாவை? | ... | 43 |
| 11. | பெண் கல்வி | ... | 47 |

# வாழ்க்கை

## 1. இளமையும் முதுமையும்

1. வீணுட் படாதொருவன், வயதில் இளையோன் எனினும், காலத்தால் மூதியோன். ஆனல், அதுமிக அருமை. பொதுவாக, இளமை முதற் சிந்தனையை யொத்தது; அடுத்துப் பிறக்கும் சிந்தனையைப்போல் அவ்வளவு அறிவு நிறைந்ததல்ல வாழ்க்கையில் இளமையுளதுபோல் சிந்தனையிலும் இளமையுண்டு. இளமையின் மனத்தில் கற்பனு சக்தி ஊற்றுப் பெருக்காய் நிற்கின்றது; தெய்வத்தன்மையுமுளது. அடங்காச் சினமும், கொடுவிச்சையும், கலக்கமும் கொண்ட இயற்கைக் குணம், ஆயுளின் நண்பகல் கடந்தாலன்றி, வினை நடாத்தற்குரிய முதிர்ச்சியுடையதல்ல. அவ்வாருயதன்மை சில வேந்தர்பாலும் காணலாம். அன்னுர் இளமை, பிழை பொதிந்திருப்பதோடு நில்லாது, நெறிபிறழ் செயலுமுடைத்து. செறிவுடைமை இளமையில் நன்று; முதுமையில் மடியின்மை வினையியற்றுங்கருவி. இளைஞர்கள் வினைத்தூய்மையைக் காண்பதிலும் புதுவினை தோற்றுவிப்பதில் வல்லுநர்; நெறிவழித் துய்ப்பதைவிட வினைத்திட்பத்துழி நிற்றலில் தேர்ச்சியுடையார்; கண்ட வினையைக் காட்டிலும் காணுறு வினைக்குரியர். முதுமையின் மதிவலி, தான் பழகிய பொருளுக்கு வழிகாட்டி; புதிய பொருளிடத்து மாசுடைத்து. இளைஞரின் தவறு வினையினழிவு; முதியோர் தவறு. விரைவிலும் நிறைவிலும் குறைவுடைத்து.

2. இளையோர் தம் திறமைக்கு மேற்பட்ட வினையையாற்ற விழைகிருர்கள்; வினையை, முடிப்பதைவிடப் பெருக்குவதில் நிற்பர்; துறையையும் அளவையும் நோக்காது, வினையின் முடிவையே நோக்கி விரைவர்; இடைப்பட்ட நீதிகளை வழிபிறழ்ந்து பற்றுவர்; நினையாத இடையூறுகள் வருமென்பதை யறியாது, மாற்றி மாற்றி யமைக்க முந்துறுவர். முதலில், மிகையான பரிகாரத்தை நாடுவர்; நிற்கவோ, திரும்பவோசெய்யப் பழகாப்பரிபோன்று, பிழையைப்

பெருக்குவனவற்றை ஒத்துக்கொள்ளவுஞ் செய்யார். முதியோரோ, எவற்றிலும் பெரும் ஐயமுறுகிருர்; நீண்டநேரம் ஆராய்கிருர்; வினைசெயல் வழி சிறிதே செல்கிருர்; வினை முடிவை நாடிலர்; நிறைந்த வெற்றியை விரும்பிலர்; சிறு வெற்றியே போதும்.

3. ஆனதுபற்றி, வினையாற்றுவதற்கு இரு திறத்தாரையும் கொளல் நன்று. ஏனெனின், அம்முறை நிகழ்காலத்திற்குரிய நன்மையைப் பயக்கும். எவ்வாறெனின் ஒவ்வொரு வகையினரும் மற்ற வகையினரின் குறைவை யொழிப்பார். இளையோர் கற்பவராயும், முதியோர் வினையாளராயும் இருப்பாராதலின், வருங்காலத்திற்கும், நன்று; புறத்தார்க்கும் அது நன்று; ஏனெனில், அதிகாரம் முதியோர்பால் நிற்க, இன்னு செய்யாமையும் வெருவந்த செய்யாமையும் இளையோர்பால் அமையும். பெரியார் ஒருவர், "இளைஞர் காண்பர், முதியோர்கனவு கொள்வர்" என்ற மொழியிலிருந்து, 'முதியோரைக் காட்டிலும் இளைஞரே இறைவன் அண்மையிலுளர்' என்று கூறினர். என்னை யெனின் காட்சிதான் கனவைவிடை உண்மையுரைக்கும். உறுதியாகக் கூறுங்கால், புவிப்பற்று ஏற ஏற, புத்தி மயக்குறும்.

4. முதுமையின் விருத்தி அறிதற்றன்மையிலேயன்றி, மனத்திட்பத்திலும், உணர்ச்சியிலுமன்று. இளமையில் முதுமை, சிலர்பாலுண்டு; ஆனுல், விரைவில் வாடுகிறது; அவ்வறிவு துணுக்குறு மறிவு; அதனின் கூர்மை விரைவில் மழுங்குகின்றது. இவ்வகுப்பில், இரண்டாம் வகையினர் இயற்கையிலேயே சில நற்குணம் பெற்றவர்கள்; ஆனுல், அது முதுமையை விட இளமைக்கே யேற்ற அணியாய் நிற்கிறது. உவமையாக, கடன் மடை திறந்தன்ன சொற்பொழிவு இளமைக்கு எழிலேயன்றி முதுமைக்கல்ல. இதில், மூன்ரும் வகையினர், தொடக்கத்தில் அளவிலாப் பெரு முயற்சியின்பாற் படுகின்றனர்; அதன்வழி வயதினளவுக்கு மேற்பட்ட மாண்புடையராய் விளங்குகின்றனர். இது 'ஆதிக்கேற்ற இறுதியிலது' என்ற மொழிக்கு இலக்கு.

—பேக்கன்

# 2. பெற்றோரும் மக்களும்

1. பெற்றோர் பெறும் மக்களின்பம் மறைவாய் நிற்கும்; அவர் தம் துயரமும் கவலையும் அவ்வழியே; இன்பத்தைக் கூறுதல் இயலாது; மற்றதைக் கூறமாட்டார். மக்கள், செயல்களுக்கு இனிமை யூட்டுவர்; எனினும் அல்லல்களை ஆழமாக்குவர்; வாழ்க்கையின் கவலையைப் பெரிதாக்குவர்; ஆயினும், சாக்காட்டின் வேதனையைக் குறைப்பர். குல வளர்ச்சி என்னும் உணர்வு விலங்குகட்கும் உண்டெனினும், நினைவும் சிறப்பும், புகழ்ச் செயல்களும் மாந்தருக்கே உரியன. ஊன்றி நோக்கி உண்மையை ஆராயின், கல்விச்சாலை அறச் சாலை முதலிய பொதுச்சாலைகள், மக்கட்பேறுவாய்க்கப் படா தாரிடமிருந்தே பிறந்திருப்பதை எங்குங் காணலாம். அன்னார் அத்துறை நின்றது, அவர் மனத்தின் மாட்சியை, உடலால் உருப்படுத்த முடியாவிடத்து, மற்றொரு வழியில், உருப் படுத்தும் பொருட்டே. ஆனதுபற்றி, குலப்பெருக்கின் உணர்ச்சி மக்கட்பேறில்லார்மாட்டுப், பெரிதேயெனல் இயையும். முதல் முதலில் இல்லம் அமைத்தோர், தம் மக்கள்பால் அளவு மீறிய ஆசையைக் கொண்டுளர்; ஏனெனில், தம்மக்கள் தன் இனத்தைத் தொன்று தொட்டு வளர்க்கவந்தவர்கள் என்றதோடு நில்லாது, தம் செய்கை களையும், அவ்வாறே நிலைநாட்ட வந்தவரெனக் கருதினர்; ஆதலால் மக்களோடு செயல்களும் குலப்பெருக்கிற் குரியனவே.

2. மக்கட் பேற்றைப் பெரிதுமுடைய பெற்றோர், அம் மக்கள் யாவரிடத்திலும் ஒரே யளவு அன்புடையராய் இருத்தலில்லை. பற்பல சமயங்களில் அன்பின் நிறை, வேறு படுகிறது; சிற்சில வேளைகளில் அவர் காட்டும் அன்பு இகழ்ச்சிக்கே இடம்; இது பெரும்பாலும் அன்னை பால் அமையும். ஸாலமன் என்ற பேரறிஞர் கூறியபடி, "அறி வுடை மகன் தந்தையைக் களிப்பிக்கின்றான்; கொச்சை மகன் தன் தாயை இழிவடையச் செய்கின்றான்." மக்கட் பெருக்குடைய குடும்பத்தில் தலைமகார் ஒருவர் இருவரே மரியாதைக்குரியவராகிறார்; கடை மகார் செல்லப் பொரு ளாய்த் திகழ்ந்து தீதுபடுகின்றனர்; இடை மகாரோ பல

தடவைகளில் மறக்கப்படு பொருளாய் நிற்கின்றனர்; ஆயினும் அவரே மகார் யாவரினும் சிறப்பு வாய்க்கப் பெறுகின்றார். மக்கள் பால் கடுஞ்சிக்கனம், தீக்கொணர் பிழையே; அது மக்களைக் கீழ்மைப் படுத்துகின்றது; காலத்திற்கேற்ற கோலம் புனையச் செய்கிறது; கயவர் கேண்மையைப் பிணைக்கிறது; ஒன்றின் நிறைவையடையினும், போதுமென்று நினையாது, மேலும் மேலும் விழைவுறச் செய்கின்றது. சிக்கன வழிச் செல்லாது மக்களை யடக்கி யாளும் முறைமையோடு பெற்றோர் நின்றிடில், நற்பயன் பெரிதே யுண்டாம். மாந்தர்—பெற்றோராயினும், ஆசானாயினும், பணியாளனாயினும்—குழவிப் பருவத்தில், ஒருவயிற்று மக்கட்குள், போட்டியுணர்ச்சியை எழுப்புதல் மூடச் செய்கையே; அது முதுமைப் பருவத்தில் வேற்றுமை யுணர்ச்சியை வளர்த்து, குடும்பங்களைத் துயரக் கடலில் ஆழ்த்தி விடுகின்றது.

3. இற்றலி நாட்டினர், தம் மக்கள், உடன்பிறந்தார் மக்கள், நெருங்கிய உறவினர், இவர்களுக்குள், எவ்வித வேற்றுமையும் பாராட்டுவதில்லை; ஒரு குலையைச் சேர்ந்தவர்களென்று ஏற்படின்போதும்; தம் உடல் வழிப்பிறத்தல்தான், பெரிதென எண்ணுவதில்லை. ஆராய்ந்து பார்க்கின் அப்பான்மை இயற்கையுலகிற்காணும் ஓர் உண்மை. அவ்வாறு கூறுவது என்னை யெனின், தங்கை மகன் அல்லது தமக்கை மகன் ஒருவன், தன் பெற்றோரைக் காட்டிலும், தன் மாமனையோ அல்லது நெருங்கிய உறவினனையோ ஒத்திருத்தல் கூடும்.

4. பெற்றோர்கள் இளமையிலேயே தம்மக்கட்கேற்ற தொழிலையோ வாழ்க்கையையோ நாடட்டும்; ஏனெனில், அப்பருவம், பெற்றோர் எண்ணிய வழிக்கு இணங்கும். ஆனால் பெற்றோர் மனத்திற்கு உகந்த வழியே, பிள்ளை மனத்திற்குச் சிறந்த வழியெனவெண்ணி, மக்களின் மனப்பான்மையை ஊன்றி உணரவேண்டா; ஏனெனில் மக்களின் விழைவு யாதாமொருவழியில் ஆழ்ந்து நிற்குமாயின் அதைக் குலைக்காமல் விடுவது நன்று. ஆனால், பொதுவாக, "சிறந்ததை நாடு; பழக்கம் அதனை எளிதாக்கும்; இனிதாக்கும்" என்ற மூதுரை நன்றெவற்றுள்ளும் நன்றே.

—பேக்கன்.

# 3. மணமும் மணமின்மையும்

1. மனைவியையும் மக்களையும் உடைய ஒருவன் காலத் திசிரிக்கு அடிமை பூண்டுளன்; ஏனெனில் நல்வழியிலோ தீவழியிலோ அவன் நாடும் எல்லாப் பெரு முயற்சிக்கும் அவர்கள் தடைப் பொருள்களாய்நிற்பர். பொது நலத்திற்கென இயற்றிய நற்கருமங்களும், அவை யீன்ற புகழும், மணங் கொள்ளாதார் அல்லது மக்கட் செல்வமில்லாதார் இட மிருந்தே தான் பிறந்தனவென்று உறுதியாகக் கூறலாம். அவையின்மை, அன்பிலும் துறையிலும் பொது நலத்தையே மணந்தது; பொது நலத்தையே நிலையுறச் செய்தது, எனக் கூறுதல் மிகையன்று.

2. ஆனபோதிலும், மக்களுடையான் ஒருவன் வருங் காலத்தைத் தீர எண்ணு:தல் அறிவுடை.ச் செய்கையே; எவ்வாறெனின், மணவினைக் குட்பட்டான் மக்களைப் போற்றல், காத்தல் என்ற உறுதிமொழி பயந்தவனுவான்; அவ்வுறுதிமொழியை, எக்காலத்திலும் நிறைவேற்றுதல் அவனது சிறந்த கடமையாம். மணங்கொளாரிற் சிலர் தமக் குரிய சுகத்தை நாடுவதோடு நின்று விடுகின்றுர்; வருங்காலம் தங்களுக்குரிய தன்றென்று தள்ளி விடுகின்றனர். மற்றுஞ் சிலர் மனைவி மக்கள் செலவு திட்டங்களன்றி வேறல்லவென எண்ணுகின்றுர். அறிவிலாப் பேராசைச் செல்வர் சிலர் மக்கட்பேறின்மை, ஒரு புண்ணியமெனக் கருதி ஏமாப்புறு கின்றுர்கள்; மக்களின்மை அதற்கேற்ற செல்வப் பெருக் கிற்கு ஒரு துறையென ஊரார் எண்ணுவரென்று நினைப்பர் போலும்; அல்லது, ஊரிலுள்ளார், மக்கட் பேறில்லா இன்னுன் செல்வர்கோன் எனவும், இன்னுன் மனைவியும் மக்களும் செல்வந் தேய்க்கும் படையெனவும், பேசக் கேட் டனர் போலும்.

113233

3. பிறப்புரிமையை நாடுவார் மணம் விழையார் எனல், சாலும். முக்கியமாக, தன்னை மகிழ்வாருக்கும், சூழல் மனங் கொண்டார்க்கும், தனது •கச்சையையும் காதணியையும் விலங்குகளே எனக் கருதவல்ல நுண் உணர்ச்சி உடையார்க் கும், மணமின்மை உவப்புடைத்து. மணவினைப் படா

மாந்தர், சிறந்த நண்பர், சிறந்த தலைவர், சிறந்த பணியாளர் ஆவர்; எனினும் சிறந்த குடிமகார் ஆகார்; அவர்கள் குடும்ப பாரமின்மையால் எளிதில் தம்தேயத்தைவிட்டுச் செல்லுதல் கூடும்; தேயம் நீத்தோடியவரிற் பல்லோர் அவ்வகையினரே.

4. மணமின்மை மதக் குருமார்களுக்கு நன்று; எவ்வாறெனில் அறம் என்னும் அருவிக்கு மனைவி மக்கள் என்ற வாவியுளதேல், அது அவ்வாவியை, நிறைத்த பிறகே தான் வழியிலுள்ள நிலத்திற்குத் தண்ணீர் பயக்கும். மணமின்மை நீதிபதிகளுக்கு நன்மையுமன்று, தீமையுமன்று; ஏனெனில் பிறர் சொற்கிணங்கலும், தீநெறியும் உடையாரெனில், மனைவியைக் காட்டிலும் ஐம்மடங்கு கொடிய பொது ஊழியன் என அவனைக் கருதவேண்டும். போர் வீரர்களுக்கு சேனைத் தலைவர், போர் புரியப் புகலும் ஊக்குமொழியில், அவர்தம் மனைவி மக்களைப் பற்றி நினைவூட்டுகின்றார். துருக்கியருக்குள் மணத்தை இழித்துரைக்கின்ற கொள்கை, போர்மகார்களைக் கயமைப்படுத்துகின்றதெனக் கூறுவதுண்டு.

5. மனைவியும் மக்களும் மாந்தரினத்திற்கெல்லாம் ஓர் சிறந்த ஒழுக்கக்கோல் என்பது பேருண்மை. மணவினைப் படாதவர், அறச்சாலைவழி மிக்குச் செல்கின்றாரெனினும், மற்றொருபால் நோக்கின் குரூரமாயும் கடினமனமுடையராயும் காணப்படுகின்றார். இதுதான் என்னை யெனின், அவர்களது இரக்கமுடைமை சோதனைக்கு அடிக்கடி வருவதில்லை. ஆய்ந்த குணமுடையவர், வழக்கத்தில் ஈடுபட்டு, அதனால் தம் நிலைமாறாமல், பொதுவாக அன்புடைக் கணவராய்த் திகழ்கின்றார். யுலிஸஸ் என்றவொரு பெரியார் "அழியா நிலையைவிட பழகிய மனைவியே நன்று" எனக் கொண்டார்.

6. கற்புடை மகளிர், பற்பல வேளைகளில் செருக்கும், இணங்காமையும் உடையராய் நடக்கிறார்கள்; அங்ஙனம் நடப்பது, தம் கற்பின் வன்மையை நினைத்தேபோலும். மனைவி, கணவனை அறிஞன் என எண்ணிடில், அது அவள் கற்பிற்கும் கணவன் வழி நிற்றற்கும், சிறந்த பிணையாகும்; தன்னை நேசித்திலன் என்று எண்ணிடில், அவள் தன் கணவன் வழி நிற்றற்றன்மை வீயும். மனைவியொருத்தி வாலிபத்

தின், நேய மங்கையாகவும் இடைப்பருவத்தின் அரியதுணைவி யாகவும் அமைகின்ருள். இத்தன்மையால் ஆடவன் எப் பருவத்தும் மணப்பதற்குக் காரணம் உண்டு எனலாம். ஆயினும், "ஆடவன் எப்பொழுது மணத்தல் வேண்டும்?" என்ற வினுவிற்கு விடை தந்தவர் பேரறிவாளிகளில் ஒருவ ரென மதிக்கப் பெறுகிருர். "வாலிபனுக்கு நாள் இன்னம் வரவில்லை, வயோதிகனுக்கு நாளே யில்லை." என்று விடை தந்தார் அவர்.

7. புன் கணவன் நன் மனைவியை யடைவது பலகால் உண்டு. அவ்வாறு அடைவது, அக்கணவனது அன்பு, உண்டாய காலத்து—விளக்க முறுதற்பொருட்டுப் போலும்; அல்லது மனைவி தன் பொறுமையை எண்ணி மகிழ்தற் பொருட்டுப்போலும். அல்லது மனைவி, தன் பொறுமையை யெண்ணி மகிழ்தற்பொருட்டுப் போலும். நட்பினர் எண் ணத்திற்கு மாருக, புன்கணவனைத் தேர்ந்தது மனைவியே யெனின், பொறை யுடைமை பயக்கும் உளக் களிப்பு, எழாத நாளேயில்லை; அவ்வகையில்தான், அம்மனைவி தன் பிழையை, பிழையன்றென்று நிலைநாட்ட முடியும்.

—பேக்கன்.

## 4. பழக்கமும் கல்வியும்

1. மாந்தருடைய எண்ணங்கள் பெரும்பாலும் அவரவர் மனப்பான்மையைப் பொறுத்துள; அவர் மொழிவதும் வரை வதும், அவர் கற்றதையும் அதன் வழித்தெளிந்ததையும் சார்ந்துள; ஆனல் அவர் இயற்றும் கருமங்கள் அவர் பழக் கத்தின் வழியே தான் நிகழும். ஆதலால் மெக்கிய வெலி என்ற பெரியார், நன்கு குறித்தவாறு, இயற்கைக் குணத் தின் திடத்தையாவது மொழியின் திறமையையாவது, வழக்கத்தின் ஆதரவு பெற்ருலன்றி நம்புவதிற் பயனில்லை. உதாரணமாக, பெருந் தீச்சூழ்ச்சி இயற்றுதற் செண்ணும் ஒருவன், மூர்க்கத் தன்மையையாவது மொழியுறுதியையுடை யவனையாவது துணைக்கோடல் நன்றன்று. அவ்வித வினையில் முன்பே ஆழ்ந்துள்ளவனையே கோடல் வேண்டும். இக்

கொள்கைக்கு விலக்கு விதியும் உண்டெனினும், இயற்கைக் குணமேனும், மொழியுறுதியேனும், வழக்கத்தைப் போன்று அவ்வளவு வலிவுடையனவல்ல என்ற கொள்கையே பெரிதும் நிலவுகின்றது. கொலைத் தொழில் ஒன்றில்தான் ஒரே தடவைக் கொலை புரிந்தாற்போதும்; உயிர்செகுத்துப் புலால் விற்பானைப் போன்று, திடமனமாகி விடுவான் என்றும்; அதில் விரதமே வழக்கத்திற்குரிய வலிமையைப் பெற்று விடும் என்றும் எண்ணப்படுகிறது.

2. மற்றக்காரியங்களில், பழக்கமே ஆட்சி செய்வதை எங்குங் காணலாம். எவ்வாறெனில், மாந்தர், வாய்ப்பறை யடிப்பர், ஆட்டுவிப்பேன் என்பர், வாக்குறுதி பயப்பர்; ஆனால், வினைநேர்ந்துழி, சாற்றிய யாவையும் விடுத்துக் கண்டவர் ஆச்சரியப்படும்படி பழக்கத்தின் பாதம் பணிவர்; அப்போது அவர்கள் பட்டசிலைபோலும் அல்லது பழக்கம் என்ற பாகன் ஓட்டும் இயந்திரம் போலும். பழக்கத்தின், செங்கோன்மையோ, கொடுங்கோன்மையோ, இன்னதென்றும் பார்க்கின்றோம். அறிஞர் தொகுதியைச் சார்ந்த இந்தியர்கள், முணுமுணுப்புச் சிறிதுமின்றி, தீப்பாய்ந்து உயிரிழக்கின்றனர்; மனைவியுங்கூட, கணவனுக் கடுக்கிய சிதையில் உடன்மாய முன்வருகிறாள். பண்டை நாட்களில் ஸ்பார்ட்டா, நாட்டு இளைஞர்கள் டையானா என்ற தெய்வ அணங்கின் பீடத்தில் பலியிடப்பட்டனர்; அப்பொழுது உடலைச் சிறிது கூடச் சொடுக்கினாரில்லை; எலிஸபெத் அரசி நாடாண்ட காலத்தில், ஐரிஷ் நாட்டு அடங்காக் குடிமகன் ஒருவன், கொலைத் தண்டனை விதிக்கப்பட்டபோது, வழக்கமாயுள்ள கயிற்றினால் தன்னைத் தூக்கிலிடாமல், கொடிகளால் முறுக்கிய கயிற்றொன்றினால் தன்னைத் தூக்கிலிட அனுமதி வேண்டினன்; ஏனெனில்; தனக்குமுன்னிருந்த அடங்காக் குடிமக்கள்பலர் அவ்வாறு தூக்கிலிடப்பட்டனர் என்று காரணங் கூறினான்.

3. ரஷ்யாவில், தன் பிழைகளைக் குறித்துத் தவமியற்றும் துறவிகள் பலர், இராமுழுதும், தண்ணீர் நிறைந்த தொட்டியில் இருப்பதுண்டு; நீரெல்லாம் பனிக்கட்டியாக உறையும் வரையில் இருப்பர்.

4. உளத்தையும் உடலையும், பழக்கம் தனக்கு அடிமையாக்குமென்பதற்கு, சான்று பலவுள. ஆதலின், பழக்கமே மானுட வாழ்க்கையின் தலையதிகாரியாக நிற்பதால், மாந்தரெல்லாம் நற்பழக்கத்தையே தேடவேண்டும். இளமையிற்றொடக்கிய பழக்கம் நிறை நன்று பயக்கும்.

5. இதைத்தான் கல்வியென வழங்குகிறோம். இக் கல்வி காரியப்படுவகையானே, இளமைப் பழக்கமேயன்றி வேறன்று. ஆதலின், இளமையில் நாவானது, முதுமையை விட, மொழிகளின் எவ்வகைச் சொற்களுக்கும் ஒலிகளுக்கும், ஏற்றவாறு அமைந்து கொள்கிறது; உறுப்புகளும் எவ்வித வேலைக்கும் அசைவிற்கும் இணங்குகின்றன. காலந்தாழ்த்திக் கற்கத் தொடங்கினோர்க்கு, நாவும் உறுப்பும் அவ்வாறு இணங்குவதில்லை யென்பது உண்மை; ஒரு துறையிலும் ஊன்றிக் கொள்ளாத சிலர் பால், நாவும் உறுப்பும் காலங்கடந்த பருவத்திலும் இணங்குந் தன்மையனவாய்க் காணலாம்; எனினும் அதுவோ அருமையினும் அருமை.

6. ஒருவன்பால் உண்டாய பழக்கமே, மிக்க வலிமையுடையதெனின், பல்லோர்க்குரித்தாய வழக்கம் அதைவிடப் பன்மடங்கு வலிவுடைத்து. ஏனெனில், ஆங்கு, செயல் கற்பிக்கிறது, சேர்க்கை துணிவு ஊட்டுகிறது, மேலாதல் எனும் உணர்ச்சி விரைவுறுகின்றது; புகழ் உயர்த்துகின்றது; அத்தன்மையினால், பழக்கம் உச்சநிலை பெறுகிறது. மக்களின் நற்கருமப்பெறுக்கு, நல்லாறிடைப்பட்ட ஒழுக்கத்திற்கு இணங்கிய சமுகத்தை ஊன்றி நிற்கும். செங்கோன்மை, முளைத்தெழுந்த நல்வினையை வளம்படுத்துமேயன்றி, வித்திடத்தூறும் குறையை யொழிக்காது. ஆனால், தீமையாதெனில், ஆய்ந்து தேர்ந்து நிறுவிய முறைகளை, நாடுதற்குத் தகுதியிலா முடிவின்பாற் செலுத்தப்படுவதே.

—பேக்கன்.

# 5. நற்சொல்லும் நற்பழக்கமும்

1. உள்ளும் புறமும் ஒரு பெற்றித்தாய பெருங் குணப் பேறு வாய்ந்தானொருவன் நற்குணமும் நற்பழக்கமும் இயற் கையாகவே அமைந்தவனாதல் வேண்டும்; இது, பதிக்கப் படாது தன்னொளி வீசும் மாணிக்கக் கல்லின் தன்மையது. உற்றுநோக்குவார். மாந்தரின் பெருமையை, அன்னாரின் வருவாயும் இலாபமும் எவ்வாறு விளம்புகின்றனவோ, அவ்வாறே அவரைப்பற்றிய புகழ்ச்சொற்களும், செயல் களும் வெளிப்படுத்துவதைக் காணலாம். "எளிய புகழ்நிறை செல்வத்தைக் கொள்கிறது" என்பது பழமொழி. என்னை யெனில், புகழ் எளியதேயாயினும் நிறையக் கிடைக்கிறது; அரியபுகழ் ஏதாமொரு காலத்தது. என்னை? சின்னஞ் சிறுகாரியங்கள் பலதடவை நிகழ்கின்றவாதலால், பலரால் அறியப்பட்டு பெரிதும் கொண்டாடப்படுகின்றன; அருங் குணமோ செயலோ ஏதாமொரு காலத்து தான் விளைகின்றது.

2. ஆதலினால், சிற்சிறுமரியாதைச் சொற்களையும் சடங்கு களையும் கையாடல் மாந்தரின் புகழ் சொற்களுக்குத்துறை, அதனை அடையவிரும்பின், இகழாமல் இருத்தலே போதி யது; அதுவன்றி பிறர்பால் கையாளின் அவர் நம்மிடத்து அம்மரியாதையை வழங்குவரென்று நம்புதல் வேண்டும்: ஆனால், அம்மரியாதைகளை மிகப்பெருகக் காட்டின்அவற்றின் பாலுள்ள நேர்மை குறைந்து, இயல்புத் தன்மையிழந்து வெளிவேட்மாய் முடியும். சிற்சிலரின் மரியாதைச் சடங்கு கள், செய்யுளின், தளை, சீர், அடி, எதுகை, மோனைபோல் அமைதல் உண்டு. எளிய காரியங்களில் இவ்வாறு நடந்து கொள்ள முற்படுபவன, அரிய காரியங்களை எவ்வாறு தழுவ முடியும்? சடங்குகளைக் கையாளாமலே யிருப்பின், பிறரும் தன்பால் அவைகளைக் காட்ட வேண்டியதில்லையெனக் கற் பிப்பது போலாகும் ஆகவே, தனக்குரிய மரியாதை குறுகும்; ஆதலால், அச்சடங்குகளை, சிறப்பாக, புதியோர் பாலும், விரும்புவோர் பாலும் நீக்கதல் கூடாது; வரம்பு கடந்து போற்றுதலும், வானளாவப் புகழ்தலும் இனியதன்று; அத்துடனில்லாது அம்முறை தன்பாலுள்ள நம்பிக்கையை நலிவுறச் செய்யும்.

3. பிறரால், நலம்விழைந்தால், மரியாதை வேண்டின், அவர்களை மரியாதையாக ஏற்க, சிற்சில சொற்றொடர்கள், மொழிகள், முறைகளே பெருமிதம். அவைகளைப் பொறுக்கி ஏற்றவாறு அநுட்டித்தல், அரும்பயன் நல்கும் தன்னிலையோடு ஒத்தவர்கள் யாவரும் தன்னை நன்கு அறிவரென்று உறுதியாக எண்ணலாம்; எனவே தனக்குரிய நிலையில் ஏற்றம் இறக்கம் கொள்ளாது நிற்கவேண்டும்; தன்னிலும் கீழ்ப்பட்டோரால் மரியாதை உண்டென்பது திண்ணம்; ஆதலால் அன்னார்பால் சிறிது தோழமை பயப்பது விருப்புடைத்து. எவன் அதிக மரியாதையைக் காட்டுகிறானோ அவன் தன்னை எளியனாக்கிக் கொள்கின்றான்.

4. பிறரைக் களிப்புறச் செய்வது இனிமையினும் இனிமையே. ஆனால் உளமதிப்பினால் எழுகின்றதெனத் தோன்றல் வேண்டும்; வெளிப்பாங்கென, எண்ண இடந்தரல் வீண். பிறருடைய கொள்கையை ஒட்டிப் பேசுவது நேர்மையே; ஆயினும், தனக்குரிய கொள்கை ஒன்றை அதனுடன் அணைக்கவேண்டும்; அவனுடைய நோக்கத்தை ஒத்துக்கொள வேண்டின், அதனின்று மாறுபடும் பண்பின் சிறப்பைக் காட்டி உடன்படுதல் வேண்டும்; அவன் வழிச் செல்ல இயையின், நிபந்தனை ஒன்று விதித்துச் செல்லவும்; அவன் மதியைக்கொள்ள முற்படின், அதற்கு மேம்பட்ட காரணம் ஒன்றை நீட்டி முற்படுதல் மூத்துடைத்து.

5. பிறரைத் தலைசிறந்து புகழவேண்டினும் வரம்பு கடவாமை வேண்டும்; இன்றேல், அவரின் பகைவர், புகழை மறுத்து இழித்துக்கூற முற்படுவர்; வரம்பிலாப் புகழ் எண்ணிய பலனையிழக்கும் வழியது. ஏற்றகாலத்திற்கோ, தருணத்திற்கோ, காத்திருப்பதுவும் வீண். சாலமன் (Solomon) என்ற பெரியார் மொழிப்படி "காற்று விதைக்காது என்று எண்ணுபவனும் முகிலை உற்றுநோக்கி நிற்பானும் அறுவடை செய்வான்." அறிவாளி, ஏற்ற அமயங் காண்பதன்றி ஒத்த தருணம் தோன்றவும் செய்வான்.

மாந்தரின் நடக்கை அவரின் உடைபோன்றமையவேண்டும்; அளவோடிருத்தலோ, அல்லது விறைப்பாக விருத்தலோ பெரிதன்று; நடப்பதற்கும், வேலை செய்வதற்கும், இடரின்றி, சிறிது தளர்வுடைய தாயிருத்தலே பொருத்தம்.

# 6. தோழரும் நட்பினரும்

1. செலவைப் பெருக்கும் தோழர்கள் விரும்புதற்குரிய ரல்லர். ஒருவனின் பரிவாரம் பெருகாமலிருக்க வேண்டின், அவன் தனது செலவைக் குறைக்கவேண்டும். அல்லலேயும் அவாவையும் எழுப்புகின்ற தோழிர்கள் செலவைப்பெருக்கும் வகையினர்; முறையான தோழர்கள், தலையளியையும், நற்சொல்லேயும் திமை காத்தலேயுந் தவிர வேருென்றும் விரும்பார். கட்சித் தோழர், செலவுத் தோழரினும் இழிதகையர்; இளைஞர் தோழமை, சார்ந்தவர்பால் உள்ள அன்பின் வழியதன்று; மற்ருெருவர் பாலுள்ள பகைமை பொருட்டே; ஒருவருக்கொருவர் உண்டாகும் மனவேறுபாடுகள் அதன் வழி முளைக்கின்றன; இவ்வேறுபாடுகளை, ஊரின் பெருஞ் செல்வர்களிடையே காணலாம். இதுபோன்று, செருக்குடைத் தோழர்கள், சார்ந்துள்ளவர்களின் பெருமையைப் பறைசாற்றுகின்றனர்; அது பல இடையூறுகளுக்கு வித்து; ஏனெனில், அவர் உள்ளக் கிடைக்கையை, பின்வரும் பயனேயறியாது, வெளிப்போந்து கருமத்தை நலிவுறச் செய்கின்றனர்; மாந்தரின்பெருமையை, தலைப்பெய்து கூறின், அது மற்றவரின் பொருமையைத் தூண்டுகிறது. இன்னுரைப் போன்று வேருெருவகைத் தோழருமுளர். அவ்வகையினர் தீங்கே! தீங்கே! என்னே? ஒற்றரைப்போல், குடும்பத்தின் மறை பொருளை அணுவணுவாய் உணர்ந்து, பிறரிடம் அவைகளைத் தெரிவித்து விடுகின்றனர்; கோட்சொல்லியும் திரிவர். இருந்தும், இவ்வகையினர், பலவிடங்களில், விருப்புடையராகின்றனர்; என்னேயெனின், அவர்கள் ஒருவன் விழையும், பொருள், செயல் யாவற்றிற்கும் உடந்தையராகி, அவைகளைச் செய்துமுடிக்க முற்படுகின்றனர்; பிறரைப் பற்றிக் கோளுரைத்துக் குலாவி மகிழ்விக்கின்றனர்.

2. ஆகவே, தம்தம் துறையிலே நிற்பவர்களைத் தோழமைகொள்வது முருகுடைத்து. இம்முறை, வீண் ஆரவாரமும் பெருமையுங் கொள்ளுதல் இன்மையேல். அரசுரிமை இயங்குமிடத்தும் நன்றெனக் கருதப்படுகிறது; போர்வீரர்கள் சேனைத் தலைவனிடம் கொள்ளும் தோழமை இவ்வழியினது.

இதைவிட முதன்மையாய் நிற்கும் தோழமை ஒன்றுளது; அது சார்ந்தவர் பாலுள்ள சீரைப்போற்றி பெருக்குவதின் கண் அமையும்.

3. தோழன் போற்றக்கூடிய திறமையில்லா விடத்து, தன்னிலும் திறமேம்பாடுடையவரின் தோழமையைக்கொள்ளாது. மிதமான திறமையுடையவரின் தோழமையைப் பெறுவது சாலச்சிறந்தது. மேலும், உண்மையுரைக்கும் வழி, தீநெறி உலவு நாளில் நற்குணத்தாரைவிடச் செயல்வழி நிற்பவர்கள் பெரும்பயன் விளைவிப்பார்கள்: அரசியல் துறைக்கு, சமநிலை யுடையவர்களைத் துணைக்கோடல் நன்மை; என்னை யெனின் மிகத் திறமை வாய்ந்த சிலரைக்கோடல், அஃதில்லா மற்றையோர் பால் அதிருப்தியை எழுப்புகின்றது; திற முடையாரும் அகந்தைக் கூடமாகி விடுகிறார்கள். எவ்வாறு? தம்மின் சீரிய திறமையையுன்னி, தனக்கென சில உரிமையை நாடுகிறார்கள். இதற்கு எதிராக, அரசன் தன்னின் தனி உரிமை வழங்குங் காலத்து, பல்வேறு திறம் வாய்ந்தவர்களைத் தேறல் நன்று; என்னை யெனின் தேர்ந்தெடுக்கப் பட்டவர் நன்றி பாராட்டுந் தன்மையராயும், ஏனையோர், அரசருக்குச் சிறந்த பணியாளரும் ஆக, ஆயத்தமாயிருக்கிறார்கள்; அரசனது விருப்பத்தின் வழி எழுந்தவர்களானபடியால், இந்நிலை உண்டாகிறது. எனினும், தொடக்கத்தில் எவரையும் அதிகமாகப் புகழாமை அறிவுடைமையாகும்; புகழின், அதற்கேற்ற அளவில் நில்லார்கள். யாதாமொருவர் தன்னை ஆட்டுவிக்க இடங்கொடுத்தாலும் தீதாய் முடியும்: அம்முறை, தன்னிடத்துள்ள வலிமைக்குறைவை, வெளிப்படுத்தி இகழ்ச் சொற்களுக்கு இடந்தந்து, புகழைப் பாழ் படுத்துங் கருவியாகும்.

4. ஒருவரின் சிறுமையைக் கண்ணெதிரே சொல்லத் துணிவில்லாத் தோழர், பெருஞ் சிறப்பினை யுடையவர்களின் புகழை வியந்து சார்ந்துள்ளவரின் புகழைச் சிறிது படுத்திக் குலைப்பர்; இருந்தும், அதன் பொருட்டு பலருடன் தோழமை கொள்வது பெருந் தீது; அம்முறை, இறுதியில் பேசுவாரின் வலையில் சிக்குறச் செய்து, பல மாறுபாடுகளை எழுப்பிவிடும்.

5. ஆதலால் சில நண்பரின் மதியையே நாடுவது என்றும் நன்று; கண்ணியமுமாகும். ஏனெனின், ஆட்டம் பார்ப்போன், ஆடுகிறவனை விட, ஆட்டத்தின் பெருமை சிறுமைகளைத்

தெளிவாகக் காண்கிறான்; பள்ளத்தாக்குதான் குன்றின் உச்சியை நன்கு விளக்குகிறது. உண்மைக் கேண்மை, உலகில் மிக மிக அரிது; அதுவும் சம நிலையுடையவர்களிடை இன்னும் அரிது; உண்டெனின் அது போற்றற்குரியது. அவ்வகை நட்பு, உலகத்தில், மேலோருக்கும் கீழோருக்கு மிடையேதான் காணலாம்: ஆனால் மேலோருடைய புகழில் கீழோருடைய புகழ் அடங்கிவிட வேண்டும்.

—பேக்கன்.

# 7. பேரும் புகழும்

1. ஒருவரின் அறமும் புலமையும், ஏற்றத் தாழ்வின்றி, பிழையிலதாய், வெளிப்படுதலே புகழ் பெறும் வழியாகும். சிலர் தங்களின் செயலிலேயே கண்ணியத்தையும் புகழையும் அடைய எத்தனிக்கின்றனர்; அவ்வகையினர் புறத்தே போற்றப்பட்டு அகத்தே இகழப்படுகின்றனர். மற்றும் சிலர் தனது நற்குணத்தைத் தானே வியந்து பாழ்படுத்திக் கொள்கின்றனர். ஒருவன். பிறரால் என்றும் முயற்சிக்காத வினையையோ, அன்றி, முயற்சித்து முடிவின்றி தளர்ந்த வினையையோ, அன்றி, முடிவெய்தி, ஆனால் நிறைந்த முடிவு காணாது நின்ற வினையையோ, செய்து முடிக்கின், செயற்கரிய கருமத்தை நாடி, எழும்புகழைவிட, பெரும்புகழ் அவனை யடையுமென்பது திண்ணம்.

2. பிளவைப் பொருத்துவதிலாவது, வேற்றுமையால் பல்வழிச் செல்லும் மக்களை ஒற்றுமைப் படுத்துவதிலாவது, ஒருவன் தன் செயலை வழிப்படுத்துவனாகில், இணையிலாப் புகழ் அவனைக்கிட்டும். செயற்கரிய கருமம் நாடி சிறுமைக் கண்படுபவன், புகழ்ப்பேறு பெறுதற்குரிய ஆற்றல் இலன் என இகழப்படுவான்; இவ்வழி எழுஞ்சிறுமை எண்ணிய புகழை இழப்பதன்றி, ஏளனத்தையும் நாட்டும்.

3. போட்டியிட்டுப் பெற்ற புகழ் நிறைந்த ஒளி யுடைத்து, தேற்றமுடைத்து: பட்டையிட்ட வயிரத்தை யொக்கும். ஆதலால், மானுடன், போட்டிக்கண் வரும் புகழையே விழைதல் நன்று. தெளிந்த அறிவுடைத் தோழர்களும், பணிந்த ஏவலாளர்களும் ஒருவனின் புகழைப் பெருக்கும் கருவிகளாவர்.

4. ஒருவனின் யாவற்ற புகழிற்கும் அவனது இல்லமே பிறப்பிடம். புகழிற்குப் புரை பொருமை. புகழை நாடு மவன், அதனை அழிக்க, தன் நோக்கம் புலமையே யன்றி புகழல்ல வென்பதை நன்கு வெளிப்படுத்தல் வேண்டும்; வெற்றி யடைந்த காலை, அது ஆண்டவன் அருளால், தனது திறமையாலன்று, என்று அடக்க மொழி வழங்கவேண்டும்.

5. அரசர்களின் புகழ் பல வரிசையுடைத்து. நாட்டை அரண் செய்து, அரசு முறையை வனைபவர் தலையாயர்; அரச நீதியை நிறுவிப்பவர்களை இரண்டாவது நாடமைப்போர் அல்லது எந்நாளும் ஆள்பவர் என்று கூறுதல் சாலும்; என்னையெனின், அவர் இறக்கினும், இயற்றிய நீதி நிலவும்; நாட்டின் இன்னலைக் களைவோரும. இன்னல் இழைப்போரி னின்று நாட்டைத் தவிர்ப்போரும், மூன்றும் இடத்தவர்; அயல் வேந்தருடன் போர் தொடுத்து நாட்டின் எல்லையைப் பெருக்குபவர், அல்லது அயலரசரின் படையெடுப்பினின்றும் நாட்டைக் காப்பாற்றுபவர் நான்காம் இடத்தவர்; ஐந்தாம் படியில் நிற்பவர், நாட்டுக் குடிமக்களின் நலத்தையும் நன் மையையும் பெருக்கும் முறையினை ஆய்ந்து அரசியலை நடாத்தி இனிய வாழ்வை விளைவிப்பவர் ஆவர்.

6. இவ்வாறே, குடிமக்களும், புகழ் பெறுதற்கு, பல படியுள. கோலோச்சின்கண் எழும் அரிய பெரிய கருமங் களை ஒப்படைப்பதற்கு அருகராயுளர் தலைப்படியாவர்; அன்னர் அரசனது வலக்கையென வழங்கவும் பெறுவர்: அடுத்த படியிலுள்ளவர் நாட்டின் பாதுகாப்பாளராவர்: அவர் சேனுபதியும் தண்டத் தலைவருமாவர்; மூன்றும்படியில், அரசனேடு குலாவுநர் திகழ்வர்; இற்றையர் தந்தமக்குரிய வரம்பு கடவாது, காவலனுக்குக் கனிந்த மொழியும், குடி களுக்குக் கோதிலாச் செயலும் கொண்ட பணியுளராவர்; நான்காம் படியாகிய இறுதிப்படியில், ஏற்ற கருமத்தை ஆற்றல் குறையாது ஆக்குவிக்கும் வன்மையர் உளர்.

7. இப்படிகள் யாவையுங் கடந்து வான்புகழ் கொள்ளும் ஒரு வகையினர் உளர். அவர் நாட்டின் நலத்திற் காக, புகழிற்காக, உற்றவிடத்தில் தம் உயிர் வழங்கும் பெருந்தகையாளராவர்.

# 8. உடல் நலம் பேணல்

1. மருந்துண்ணும் முறையைக் கொள்வதிலும் அதனைக் கடந்துநிற்கும் உடற்பேணு முறையைக் கோடலே அறிவுடைத்து. ஒருவன் தனக்கு 'நன்று எது, தீது எது' என நுட்பமாக ஆராய்ந்து ஒழுகுதலே சீரிய மருந்தாம். "இது என் உடலுக்கு ஏற்காதது, ஆதலின் அதனை விழையேன்; இதனால் தீமை ஒன்று மிலது, ஆதலால் அதை ஏற்பேன்" என்று முடிவு காணுதல் சீலம். என்னையெனின், இளமையின் இயற்கை வலிமை, வரம்பிழந்த செயல் பலவற்றில் ஈடுபட்டு, முதுமையை விரைவில் கூறுபடுத்தும். ஆகவே, வரும் முதுமையை யுன்னி இளமையிற் செய்தவைகளை மீள மீளச் செய்வதைத்தவிர்; ஏன்? முதுமையை யாவராலும் தடுக்கொணாது.

2. உணவில் பெரும் மாறுதல்கள் செய்வதை எண்ணித் துணிக; செய்யவே ஏற்படின் பழைய வகை யுணவுடன் புதிய உணவைப் பொருத்து; மேலும், ஒன்றை மாற்றுவதிலும் பல மாறுதலைக் கொள்வது நன்றென அறிஞர்கள் கொள்கிறார்கள். உடை, உணவு, துயில், உடற்பயிற்சி முதலியவைகளையும் அவைபோன்ற மற்றவைகளையும் பரிசீலனை செய்; அவைகளில் ஏதாமொன்று தீதெனக் காணின் அதைப் பையப்பைய நீக்க முயல்: ஆனால் அம்மாறுதலால், நொய்மை ஏதேனும் ஏற்படின், விட்ட அதனை மீளவுங் கொள்; ஏனெனின் பெரும்பான்மைவழி நன்றெனக் கருதுவதை சிறுபான்மைவழி உடலுக்கேற்றதினின்று பிரித்துணர்வது கடினம்.

3. நெடிய வாழ்க்கைக்கு, ஊண், உடை உறக்கம் என்ற மூவிடத்தும் கவலின்றிக் களிப்புடனிருத்தல் சீரிய முறையாகும். மனத்திடை யெழும் அவாக்களை யடக்க அழுக்காறு அகற்று; கவலைத் திகில்களை; உள்ளெழுந்து ஓங்கும் சினம் கா; மறைவுறு பொருளையறிய எழும் விழைவை மறு; வரம்பிலா இன்பத்திடை திளைத்தலை வெட்டு; பிறரறியாத் துயரை விளம்பு; வெற்றியே விழை; உளமகிழ்ச்சியே தேடு, வெளிமகிழ்ச்சி வேண்டா; பல்வகை இன்பமே பழகு,

ஒன்றின் நிறை இன்பமன்று; புதுமையும் வியப்பும் நாடு; இயற்கைப் பொருளினின்று எழும் சிந்தனைகள், வரலாறுகள், நீதிக் கதைகள் இவைபோன்ற செம்பொருள் திகழும், நூல் பல, கல்; மனக்குகையில் மாசறும் போதனைகளைச் சேமி.

4. உடல் நலம் பேணு முறையில், மருந்தை அறவே நீக்கி, பின் அதனை யருந்த நேர்ந்துழி, அது உடலுக்குப் பொருந்தாப் பொருளாய் நலிதரல் கூடும்; மருந்து மலிந்து கிடப்பின் நோயுற்ற காலை, மருந்தின் குணம் தோன்று தொழியும். பல கால் மருந்துண்பதைவிட பருவத்திற்கேற்ற உணவை நாடுவது மேதகம்; இம்முறை மருந்துப் பழக்கத்தைத் தழைக்க விடாது. புத்துணவு, உடலில் மாறுதல் ஏற்படச் செய்யினும் இன்னலைக் குறைக்கும். மெய்யில் புதுக்குறி ஏதேனும் தோன்றின் அதனை இகழாதே; அதைப்பற்றி ஆய்.

5. பிணியால் உழலும்போது உடல் நலத்தைத் தேடு; உழலாவிடத்து உடற்பயிற்சியைப் போற்று; நலமுடைய போழ்து உடற் பயிற்சியை நாடுமொருவன், பிணியுற்றகாலை உணவாலும், உடல்நல விதியாலும், அப்பிணியின் கொடுமையைத் தணிக்கவியலும்.

6. செல்சஸ் என்ற மருத்துவப் பெரியார், உடல் நலப் பேற்றிற்கும், நெடிய வாழ்க்கைக்கும் ஒரு நியதி வகுத்துள்ளார். அது யாதெனின், வெவ்வேறு குணங்கள் வாய்ந்த உணவை விழைதலாம்; அவ்வழிச் செல்லுங்காலை எது முற்றிய நன்மை பயக்குமோ அதையே மனம் விழைய வேண்டும். நிறையுணவும் செறிபட்டினியும், நிறையுணவு மாத்திரமன்று; உடற் பயிற்சியும் ஓய்வும், உடற் பயிற்சி மாத்திரமன்று; துயிலும் விழிப்பும் துயில் மாத்திரமன்று; இம்முறைபயில் இதுவே இயற்கை நியதி; இதனுடன் ஒத்துழைத்துப் பிணியைக் களை.

மருத்துவரில் சிலர், நோயாளியின் நோக்கத்திற்கிணங்கி, நோயை உண்மை முறையில் போக்க இயலாது, இனியவுரைக்குந் தன்மையர்; மற்றும் சிலர் நூலிற் கூறியவாறு இம்மியேனும் வழுவாது செல்லும் வாய்மையுடையர். இன்னுர் நோயாளியின் உடற்கூற்றைக் கணக்கிடுவதில்லை. ஆதலால், இவ்விருவகையினர்க்கும் இடைப்பட்டோரை

அழைப்பது நன்று; இப்பண்பு ஓரேவிடத்து அமையப் பெறுவிடின், இரு திறத்திற்குமுரிய இருவரைக் கொள். தொழில் முதிர்ச்சி பெறறிருப்பதோடன்றி உன் உடற் கூறுகளைப் பன்முறை ஆய்ந்து தெரிந்திருக்கும் ஒருவரைக் கொள்ள மறவாதே.

—பேக்கன்.

## 9. மிர்ஸா கண்ட காட்சி

1. என் மூதாதையர் வழக்கப்படி, சிறப்புறுமோர் ஐந்தாம் பிறையன்று, தூய உள்ளத்தனய், காலை வணக்கஞ் செய்து, எஞ்சிய பொழுதைக் கடவுள் வணக்கத்திலும் சிந்தனையிலும் செலுத்த எண்ணி, பாக்டாட் பட்டினத்து உயர் குன்றுகளின்மீது சென்றேன். குன்றின் உச்சியில் மெல்லிய இளங்காற்று வீசியது. நான் அதன் நலத்தை உண்டு நிற்கையில், மானிட வாழ்க்கையின் நிலையாமையைப் பற்றி ஓர் ஆழ்ந்த சிந்தனையில் வீழ்ந்தேன். எண்ணங்கள் பல, ஒன்றன் பின் ஒன்ருய் மனத்திடை எழுந்து மோதின. அவற்றின் பயனய், "உண்மையாக மனிதன் ஒரு நிழலே! அவனது வாழ்க்கையானது கனவே!" என உன்னினேன்.

2. இவ்வாறு மனக் கடலிடை எண்ணங்களில் மூழ்கி வருகையில் அருகிலிருந்த மலையொன்றின் முடிமீது என் பார்வை விழுந்தது. அங்கு, கையில் ஓர் இசைக்கருவி விளங்க, இடையராடை அரையில் துலங்க ஒருவர் நின்ருர். உற்று நோக்கிய அளவில், அவர் இசைக் கருவியைத் தம் உதட்டில் வைத்துப் பாட ஆரம்பித்தார். ஆ! எழுந்த ஓசையின் இனிமையை என்னென்று இயம்புவது! பல்லிசைப் பண்கள் எழுந்து நிறைந்து ஒன்றென நின்று, பேரின்பம் பயந்தது. அதுகாறும் அதைப்போன்ற இன்ப ஓசையை யான் கேட்டதில்லை. நல்லோர் மரண காலத்துத் துன்பம் அகலும் பொருட்டுப் பேருலகம் புகுந்தவுடன் அனுபவிக்கும் இணையிலா இன்னிசை இதுதானே? என எண்ணினேன். அதனை நினைந்து நினைந்து என் மனங் கரைந்தது.

3. குறித்த மலையோ பேரறிவாளி ஒருவர் உறைவிடமெனக் கேள்வி. அதன் வழிச்சென்ற அனைவரும் அவ் வின்னிசையை அனுபவித்ததாகவும் கேள்வி. ஆனல், அவ்

விசைக்குக் காரணரைக் கண்டார் எவருமிலர். நான் முற் கூறிய கீதவொலியில் மயங்கி அதிசயத்துடன் அவரை உற்று நோக்கினேன். அவ்வமயம் அவர் என்னைத் தன்னிடம் வருமாறு குறிசெய்தார். உடனே யான் மேலோரிடஞ் செல்லவேண்டிய பணிவுடன் சென்றேன். என்மனம் முழுவதும் அவர்பால் அடிமைகொண்டது; அவர் தாளில் வீழ்ந்து கண்ணீர் சொரிந்தேன். இரக்கந் ததும்பும் புன் சிரிப்புடன் அவர் என்னை நோக்க, என் உள்ளத்திடை யிருந்த அச்சமும் இருளும் என்னை விட்டோடின. அவர் நிலத்திடையிருந்து என்னைத் தூக்கிக் கையைப்பற்றி, "மிர்ஸா! உன் உள்ளத்திடை யுதித்த எண்ணங்களை யறிந் தேன். என்னுடன்வா!" என்று அழைத்தார்.

4. ஆணை வழி நிற்க, நான் அவரோடு வரையின் பெரு முகட்டை யடைந்தேன். அவர் என்னை நோக்கி, "கீழ்த் திசை நோக்கி, நீ காண்பவற்றைக் கூறு," என்றார். "பரந்த பள்ளத்தாக்கும், அதன் ஊடே மோதி மோதி நிற்கும் பெருந்திரைகளும் உள" என்றேன். "நீ காணும் பள்ளத் தாக்கானது துன்பக்கடல்; திரைகள் அழிவிலாப் பேரலை யின் துணுக்குகள்," என விளக்கினார். "அலையானது பனி சூழ்ந்த ஓர் எல்லையில் தோன்றி மற்றொரு எல்லையில் மறைவ தேன்?" என்றேன். அவர், "நீ பார்ப்பது ஞாயிற்றினால் அளவிடப்படும் காலம். புவியின் படைப்புடன் தோன்றித் தன் நிறைவை நோக்கிச் செல்கின்றது. இருமருங்கிலும் இருள்சூழ் அக்கடலை இப்போது ஆழ்ந்து நோக்கு! காண்பதை எடுத்துக் கூறு!" என்றார். "அலைகளுக் கிடையே மதகு ஒன்றுளது," எனப்பகர, "அம்மதகு தான் மானிட வாழ்க்கை; அதை நன்றாய்க் கண்ணுறு!" என்றார். நான் அவ்வாறே நோக்க, அதனில் சிதறுண்ட கண்கள் சிலவும் சிதறாக் கண்கள் பலவுமாக, இருவகை யிலும் நூறு கண்களைக் கண்டேன். அவற்றை எண்ணி வருகையில், அப்பேரறிவாளர், "தொடக்கத்தில் ஆயிரம் கண்கள் இருந்தன; பெருத்த வெள்ளமொன்றில் மற்றவை களெல்லாம் பொடிபட்டன; ஆதலாற்றான், இப்போது மதகு இடிந்த நிலையில் இருக்கின்றது" என்று கூறி, "இன் னும் என்ன காண்கிறாய்? எடுத்துக் கூறு!" என்றார்.

"திரளான மாந்தர் அதன்மீது செல்கின்றனர்; ஒவ்வொரு கடையிலும் கருமுகில் ஒன்று தொங்கிக் கொண்டுளது" என்றேன். மேலும் மேலும் ஊன்றிப் பார்க்க, அங்ஙனஞ் சென்ற மாந்தர் பலர், மதகின் கீழே தகர்த்துச் செல்லும் அலையிடைப்பட்டுச் சுழன்று திகைப்பதைக் கண்டேன்; மேலும் நோக்க, கட்புலன் உணரக்கூடாதவாறு கணக்கற்ற சூழ்ச்சிக் கதவுகள் மதகினூடே நிறைந்திருந்தன. வழிச் செல்வோர் அவற்றை அறியாது, அலையிடை வீழ்ந்து மறைந்தனர். இச் சூதுக் குழிகள் மதகின் தலைப்பில் நிறைந்திருந்தமையால், கருமேகத்தைத் தாண்டியதும் பலர் அவற்றுள் மாண்டனர்; நடுப்பகுதியில் சூதுக்குழிகள் சிலவேயிருந்தன; இறுதியிலோ அவை நிறைந்தும் நெருங்கியும் இருந்தன. சிதறுண்ட பாகத்தின் வழியே தள்ளாடிய நடையுடன் சென்றவர் சிலரேயாயினும், அவர் நெடிய வழியின் களைப்பால் ஒருவர் பின் ஒருவராய் வேலைவாய்ப்பட்டனர்.

5. இவ் வியப்பெழு அமைப்பையும், அதன் கண் தோன்றிய எண்ணிலாப் பலவகைப் பொருள்களையும் உள்ளத்து ஒருங்கே நிறுத்திச் சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்தேன். மாந்தர், தம் குதூகலத்திடையே தத்தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள, எதிர்ப்பட்ட எவ்வெவற்றையும் கைப்பற்றத் தாவுவதையும் தத்தளிப்பதையும் காண, மனம் துன்புற்றது. சிலர் நல்லுலகத்தை நோக்கி ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும் போதே கீழ் விழுந்து மறைந்தனர். ஒளி கக்கிய நீர்க் குமிழிகளைத் தொடர்ந்தனர் பலர். ஆனால், அந்தோ! அன்னார் அவற்றை அணுகும் எல்லையில் கால் வழுக்கிக் கீழே மூழ்குகினர். இவ்வாறு, எல்லாம் குழப்பமாயிருக்கையில், வாள் ஏந்திய சிலரும், கழிநீர்க் கோப்பை தாங்கிய சிலரும் பாலத்தின்மீது அங்குமிங்கும் ஓடி, சூழ்ச்சிக் குழிகளில் பிரயாணிகளைத் தள்ளினர். இவ்வாறு செய்திராவிடில், அவர்களில் பலர் பிழைத்திருப்பர்.

6. இங்ஙனம், இப்பிறவி யென்னுமோர் இருட்கடலைக் கண்டு, கண்ணருவி காட்டிய என்னைப்பார்த்து, என் அருகேயிருந்த பேரறிஞர், "பாலத்திடை இனி உன்கண்ணைச் செலுத்தாதே! உன் அறிவிற்கு எட்டாதது ஏதேனும் இருப்பின் அதை மாத்திரம் சொல்" என்றார். நான் உடனே

மேல்நோக்கிப் பார்க்க, "பாலத்திற்கு மேலே ஓய்வின்றிப் பறந்து இடையிடையே சிறிது போழ்து மதகின்மேல் உட்கார்ந்துவரும் புட்கள் என்ன தெரிவிக்கின்றன? கழுகுகள், பெண்ணுருக் கொண்ட புட்கள், கருங்காக்கைகள், பசிப்பிணி கொண்ட கடற்பறவைகள் முதலாய புட்களுக்கிடையே சிறகுடைச் சிறுவர்களைக் காண்கின்றேன்" என்றேன். "இவைகள்தாம் மாந்தர் வாழ்க்கையைக் குலைக்கும் பொறாமை, பேராசை, மூட நம்பிக்கை, மனச் சோர்வு, காமம் முதலியனவும் வாழ்க்கையினைத் துன்புறுத்துகின்ற மற்றைக் கவலைகளுமாம்' என்றார் அப்பெரியோர்.

7. அதைக் கேட்ட யான் பெருமூச்செறிந்தேன். "ஐயோ? மனிதன் வீண் படைப்பே! புலால் பொதியுடலன்! துன்பக் கூடு! நமன் இரை!" என்று பலவாறு நினைத்து மனம் நொந்து, உளம் சலித்து, வாழ்க்கையை வெறுத்து, அலறினேன்.

இவை யாவையுங் கண்ட அப்பேரறிவாளி மனத்திடை கருணை பூப்ப, "இக்கொடிய காட்சியைப் பாராதே? அழியா இன்ப நிலையைக் காண ஏற்பட்ட இம்முதற்படியை இனி நோக்காதே! சுழலில் அகப்பட்டு, ஆயிரக்கணக்கான மாந்தரை விழுங்கிச் செல்லும் பெருத்த அலையைச் சூழ்ந்திருக்கும் அடர்ந்த ஆவியைக் கண்ணுறு!" என்று தேற்றினர், நான் அங்ஙனமே கண்ணுற்றேன். அடர்ந்த ஆவி மெலிவுற்றது. சேய்மையிறுதியில் கரையிலாப் பெருங்கடல் ஒன்று தோன்றியது. அதன் மத்தியில் பருத்துத் தகர்ப்பதற்கு இயலாப் பெருவரையொன்று நின்று, கடலைச் சமகூறுக்கியது. ஒரு பகுதியில் கருமுகில் அடர்ந்து நின்றமையால் கண்ணிற்கு ஒன்றும் புலப்படவில்லை. மற்றொன்றிலே எண்ணிறந்த தீவுகள் பொலிவுற்றன. ஒவ்வொரு தீவிலும் பல்சுவைச் செழுங்கனிகளும், நறுமணப்பல்நிறப்பூக்களும் திகழ்ந்தன. அவைகளூடே சிற்சிறு ஒளிவாவிகள் பல மிளிர்ந்தன. மெல்லிய பொன்னுடை தரித்தும், தெளிந்த நீரோடையருகில் அமர்ந்தும், பூவணை மீது துயின்றும், சிகையில் நறுமலர்ச் சூடியும் தோன்றிய மாந்தர் பலர் அப்பொழிலிடையே இலங்கினர். புள்ளொலியும், நீர்வீழ் ஒலியும், மாந்தர் ஒலியும், இசைக்கருவிகளின் ஒலியுங் கலந்து ஒன்றென எழுந்தன.

8. இவ்வனப்பைக் கண்டதும் என்னையறியாது உள்ளம் பேருவகை பூத்தது. சிறகுறின், அச்சீரொழுகும் இடத்தை நண்ணலாமென்று அவாவினேன். அவ்வமயம், என்னருகே யிருந்த பேரறிஞர், "இறப்பு ஒன்றினலன்றி வேறு எவ்வாற்ருனும் அதை யணுகுதல் இயலாது" என்று அறைந்தார். "பசுமையாயும் பாங்காயும் காணப்படும் தீவுகளைப்போல் இன்னும் எண்ணிறந்த தீவுகள் உள. அவை கட்புலனுக்கும் எட்டா; மனோவேகத்திற்கும் எட்டா; அவையாவும் மரணத்திற்குப்பின் நன்மக்கள் உறையும் மாளிகைகளாம். அவை அவரவர் புண்ணியத்திற் கேற்றவாறு இன்பம் பயக்குந் தன்மையன. ஒவ்வொரு தீவிலும் உள்ளவர் அதனை இணையிலா இன்பமென்றே கருதுவர். மிர்ஸா! செழுமையாயுள்ள அம்மாடங்களை எவ்வாற்ருனலும் அடையவேண்டு மென்று ஒவ்வொரு மனிதனும் முயல்வது கடமையல்லவா? இவ்வின்ப உலகத்தை அளிக்கும் வாழ்க்கையைத் துன்பக்கடலென்றும் மாயவாழ்க்கையென்றும் கனவென்றும் மொழிவது சரியா? இவ்வுலகத்தை இறப்பு ஒன்றே ஈதல் கூடுமெனின், இறப்பைக்கண்டு அஞ்சலாமா? ஆதலின் மனிதன் வீண்படைப் பென்று புகலாதே! அவனுக்கென இறுதியில் சேமித்து வைத்திருக்கும் அந்தமில் இன்பத்தை எண்ணிப்பார்?" என்று மேலும்பல அப்பெரியார் விரித்துரைத்தார்.

9. நான், சொல்லுதற்கரிய மகிழ்ச்சியுடன் அவ்வருந் தீவுகளை இமைக்காது பார்த்து நின்றேன். சிறிது நேரஞ் சென்றது.; கருமுகில் சூழ்ந்திருந்த மற்ருெரு பகுதியில் மறைந்து நிற்கும் பொருள்கள் இன்னவையென்று எடுத்துச் சொல்ல வேண்டினேன். பேரறிஞர் மறுமொழி யொன்றும் தந்திலர். மறுமுறையும் கேட்க அவர்பால் திரும்பினேன்; அவரது உருவம் மறைந்தது; கண்கள் மறைந்தன! மதகு மறைந்தது! முன் கண்ட யாவும் அங்ஙனமே ஒன்றன்பின் ஒன்ருய் மறைந்தன. **பாக்டாட்** பட்டினத்துப் பள்ளத் தாக்கும் அதன் பக்கத்தில் மேய்ந்து கொண்டிருந்த எருது, ஆடு, ஒட்டகம் முதலியனவே என் கண்ணெதிரே நின்றன. சுருண்டெழுந்து மோதிய அலையேனும், வளைந்த கண்களேனும், உவகையூட்டும் தீவுகளேனும் தோன்றில! —**அடிசன்**

# 10. கற்பிக்கவேண்டியவை யாவை?

## I

*1.* மக்களுக்குப் போதிக்கும் வகையில், செயல்வழி யானே, "போதுமென்ற மனத்தை எவ்வாறடைவது" என்று காட்டுவது தான், பெரும்பயனும் பெருநெறியும் கொண்ட துறையாகும். "எவ்வாறு இன்னும் பெருக்கிக் கொள்வது" என்ற துறை சரியல்ல. உண்டும், உள மகிழ்த லில்லாதிருப்பது தீயோர்பாற் காணும் குணக்கேடு. "உண்ணு! உளமகிழ்!" என்பது இறைவன் ஆசிமொழி. எல்லா நீர்வேட்கையைத் தீர்ப்பது ஒரே வகைத் தண்ணீரே போல் 'இன்னும் வேண்டும்' என்ற பசிப்பிணியைத் தீர்ப்பது ஒரே வகை யுணவுதான். அது நீதியும் நடுவு நிலைமையுமே. இவ்வுணவை நாடுவார் எவரும் அகங்களிப்பர். ஏனெனில், அது நல்லுலகத்து உணவு; இதைத் தள்ளி, எதிர்வழி நிற்பாரகம் களிப்புறுது; ஏனெனில், அவர்பெறும் உணவு தீய உலகத்தது. ஆதலால், 'பெற்றதே கொண்டுவக்கும்' பண்பை மாந்தரை யடையச் செய்ய, இன்பம் இன்னது, அமைவுறு வாழ்க்கை இன்னது, என்று நன்குய் உணர்ந்திருத் தல் அவசியம்.

*2.* அமைவுறு வாழ்க்கையாவது யாது? வருங்காலத்து பெருப்பதவி ஒன்றையும் நாடாது, இன்பறு நெடுவாழ்க்கை யைத் தேடுவதாம். இதனுல், வருங்கால அறிவை இழப்ப தன்று; வருந்தீமையை விலக்குதலே; வருங்காலத்தைப் பற்றி கவலையுறுமையே; வருங்காலத்திற்கு வேண்டிய பொருள் தேட வேண்டாமையுமல்ல: வேண்டுவதற்கு மேல் சேகரிக்காமையே. குடிமைக்குரிய "நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும்; குலம்வேண்டின் யார்க்கும்பணிவு வேண்டும்" என்பதே; விலை கொளாத இன்பங்களை யெல் லாம் தெரிந்து நிற்றலே. ஆகவே, மூதன்மையாக அது இயற் கையுலகின் எழிலில் ஆர்வம் கொள்ளுதலாகும்.

*3.* எங்கெங்கு, இயற்கை பால் வாஞ்சையுண்டோ அங் கெல்லாம் அருளுடைமை யுண்டாம். விளக்கிடின், எவ் வகையிலும் சம நிலைமையுள்ள இருவரில், இயற்கை

வாஞ்சை எவரிடத்து மிகுதியோ, அவரிடத்து, மற்றவரைக் காட்டிலும் இறைவன்மாட்டு நம்பிக்கை நிறைந்திருக்கும். ஆரும் அறிவாலும், எழுப்புவதற்கோ, மறுப்பதற்கோ முடியாத எல்லா ஆற்றலோடும் எங்கும் நிறைந்த சக்தியுளது, என்ற உணர்ச்சியை, இயற்கை வழிபாடு எழுப்புகின்றது. காலம், உணர்ச்சி, உழைப்பு, மதக்கோட்பாடுகள் முதலியவைகளுக் குரிய வணக்கத்தை நீக்காது, வரம்பைத் தாண்டாது, எங்கு இயற்கை வழிபாடு நடக்கின்றதோ, அங்கெல்லாம், அவ்வழிபாடு, வேறெவ்வகையானும் கிடைத்தற்கரிய, பேருண்மைகளைக் கொணரும் ஒரு சிற்ரூடையாம்.

4. இயற்கை வாஞ்சை, காலக்கோட்பாட்டைப் பொறுத்ததென கூறுவதினும், காலத்தின் நன்மையையும் கிழமையையும் பற்றினதென்று சொல்வது பொருத்தமுடைத்து. ஐயமின்றி, நம் நலத்திற் கேற்றது அதுவே. ஊக்கத்தோடும், கடமை என்ற உணர்ச்சியோடும், இயற்கை வாஞ்சையைப் போற்றினுல், வளர்த்தால், பெரு நன்மையொன்று பிறக்கும்; ஆனுல் அந்நன்மை எத்தன்மைத்து என்பதை நிகழ்காலத்தில் வரையறுக்க முடியாது. ஒளியொன்று தோன்றி, மனித வாழ்க்கையின் உண்மை இயல்பும், தன் ஆற்றலுக்கு ஏற்ற உண்மை இடமும், தனக்கும் தன்னைப் படைத்தோனுக்கும் உள்ள, உண்மையுறவும், இன்னதென வெளிப்படுத்தும்.

## II

1. ஐம்புலனுகர்ச்சியையுடைய எவனுக்கும், நாளொன்றிற்குப் பத்துப் பன்னிரண்டு மைலுக்கு மேற்படாத மென்னடை, மற்றெல்லாவகைப் பயணத்தைக் காட்டிலும் அகக் குளிர்ச்சி பயக்கும். பிரயாணத்தால் வருமின்பம், வேகம் ஏற ஏறக் குறைதலால் அகம் இடர்ப்படுகின்றது. புகைத்தேரில் செல்வது பிரயாணமேயல்ல. அது ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு அனுப்பப்படும் மூட்டையே போன்றுதான். குதிரை மீதமர்ந்து, பிறர் நிலத்தின்மீது சவாரி செய்தலைவிட, பெருமான்கள், தம்தம் வயலைத் தாங்களே யறுப்பார்களேயாயின், மேல் வகுப்பார், உடல் நலமும் இன்பமும் மிகப் பெரிதும் அடைவர்.

## III

யாவற்றிலும் எது அழகுடைத்து என்று வகுத்துக்கூற, அழகில், உளக் களிப்பு எழவேண்டும். அவ்வாறுய மாந்தர் மிகச் சிலரே யெனல் சாலும். ஒரு காலத்தில் அழகுடைப் பொருள்கள் நன்குய் அறியப்பட்டன. இற்றை நாளிலோ, எங்கு சென்று பார்த்தாலும், மாந்தர்கள் தாஞ்செல்லுமிட மெல்லாம், இயற்கை யெழிலைக் குறைத்துக் கொண்டே வருகிருர்கள். குடியிடத்தை விசாலிப்பதும், வேகமாகச் செல்லுவதுமாகிய, இவ்விரண்டு ஆசையைத் தவிர வேறெது வும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆண்டவனுல் கிடைக் கும், எழில் நிறைந்த ஒவ்வோரிடமும், சிதைவுறுகின்றது.

## IV

அறிவீனனே, இடத்தையும் காலத்தையும் குறுக்க எண்ணுவான். அறிவுடையான் அவற்றை நீடிக்க யெண்ணு வான். அறிவீனன் இரண்டையுங் கொல்லுகிருன். அறி வுடையான் அவைகளைப் பெற்று, பிறகு அவைகளுக்கே உயிர் தருகின்ருன்.

## V

சான்ருேர் ஒவ்வொருவரும் மற்றெல்லோராலும் ஒத் தாசை செய்யப்படுகின்றனர். ஏனெனின், எல்லாப் பொரு ளிருந்தும் எல்லா மாந்தரிடமிருந்தும் நன்றையே கொளல் அவர் பெற்ற பேறு.

## VI

இறைவன் தன்னுல் படைக்கப்பட்ட ஒவ்வொரு மாந்த ரிடத்திலும் அவருக்கேற்ற கடமை யொன்றைப் பொதிந்து வைத்துளன். மாந்தர் அதை யுணர்ந்து, நன்றியுடன் அக் கடமையை ஆற்றினுல், மனிதன் என்ற நிலைக்குப் பொருந் நடந்தால், அகத்தேயுள்ள ஒளி வழி, அதைத் தணிக்க நிற்கும் விட்டிற் பூச்சிக்கு இடங்கொடாது; உண்மையாக நடந்து கொண்டால், நீங்கா ஆவல் ஒன்று பிறக்கும். அது, அதற் கேற்பட்ட துறையிலும் அளவிலும், மாந்தர்கட்கு, என்று முளதாய பெரும்பயனை யூட்டும்; தூய்மையும் நெடுமையும் கொண்ட பயனுகும். இவ்வொளி, மாந்தர்க்குத் தக்கவாறு

பேதமுறும். ஆயினும், குறைந்த ஒளியையுடையவன்கூட, மிகச் சிறிதே எனினும், அது அவனுக்கெனவாய்த்த வொளியாகும். நன்னெறிப் படுத்தியபோது, அவன் இனத்தார் யாவர்க்கும், நீடித்த கொடையாகும்.

## VII

மற்ற உயிருடையனவோடு, எவ்வகையிலாவது உறவிலாச், சடமோ, ஆவியோ, பிராணியோ கிடையாது. அதினுடையவும் அவர்களுடையவும் நிறைவு அவ்வுறவில் தான். அதில்தான் ஓர் வகை இன்பமும். ஆகவே, ஆன்மவொற்றுமை, பிறர் நோய் கண்டு தளர்தலிலும், கொண்டு கொடுத்தலிலும், பகுதியளவாய் நின்று, அன்பில் மாத்திரம் முழுதும் நிற்கிறது. இவ்வான்ம நிகழ்ச்சிகள்தான் அவைகளின் களிப்பும் வலிமையும்; வலிமை, அவைகளின் கூட்டுழைப்பிலும் தோழமையிலும் அமைந்துளது; மகிழ்ச்சியோ அழியா நன்மையொன்றையளித்து அழியா நன்மையொன்றைக் கொள்ளுதல் பாலுளது; ஒன்று மற்றொன்றையடுத்து, பிரித்தற்கிலதாய் நிற்பதிலும், இறைவனை முதலிடமாய் அடுத்து நிற்பதிலும் உள: புவியிடைப் பிராணிகட்கு, ஒற்றுமைதான். (அவர்களுடைய) வல்லபம்; இனிய வாழ்க்கை.

## VIII

ஆண்டவன்பாலன்பிலன், கூடப் பிறந்தவனிடத்தும் அன்பிலான்; தன் காலடிக் கீழுள்ள புல்லையும் நேசியான்; தனக்குப் பயன்படா சீவர்களிடத்தும் அவ்வாறே. இறைவனால் நேசிக்கப்படும் எல்லாப் பொருள்களையும் நேசியாத ஒருவன் படைத்தோனையாவது, உடன் பிறந்தானையாவது, நேசித்தல் இயலாதெதான்றும்.

## IX

மெய்யர்கள், பொருளின் உண்மை நிலையை முற்றிலும் காண முடியாவிடினும்—காண்பர். மாந்தர் வலிமை ஒரு பொருளின் நிறைவை இதுகாறும் கண்டதில்லை. ஊன்றிப் பார்க்கப் பார்க்க, அதிகமாகக் காணலாம்; பார்ப்போர், அவரவர்க்குரிய குணத்திற்கேற்றவாறு, கருத்தில் வேறுபடுவர்; குணம் யாவர்க்கும் ஒன்றுதான் என்று கொளினும்

வேற்றுமை முதிர்ந்துதானிற்கும். ஆய்ந்துழி, மேற்செல்லச் செல்ல புதியதொன்று வெளிவரும். ஆயினும் தொடக்கத்திற் தோன்றியதும் அங்கே இருக்கும். அது பொய்ப்படுவதில்லை. ஆனல், புதிது புதிதாகத் தோன்றுங் கருத்துக்களினுல், மாறியும், நிறைந்தும், மற்றவைகளோடு உறவுபூண்டும், அழகில் முதிர்ந்தும், அடிமுடியிலாப் பேருண்மையின் ஓர் பகுதியா யிலங்கும்,

—ரஸ்கின்.

## 11. பெண் கல்வி

1. பெண்ணிற் குகந்த கல்வி யாது? ஓர் மாதின் தோற்றப் பொலிவு, அன்னுள் மனத்திடத்து நிலவும் அமைதி, சாந்தத்தின் வழி நிறைவுற்று முழுமையடைந்து ஒளி வீசும். அவ்வமைதி, தன் வாழ்நாளில், எண்ணுந்தோறும், நாட்கள் பல, நன்னுளாய்த் திகழ்ந்தன, பயன்பல பொதிந்துளவென, எண்ண இடந்தரும் வழி எழுவதாகும்: தான் புரிந்த யாவும் இனிய செய்கைகளே எனத் தோற்றுவிக்கும் வாழ்க்கையின் பால் பிறக்கும். இவ்வமைதி, மாதற்கு அணிகலமெனப்படும் 'பேதைமை' யுடன் கூடின், பேரெழில் பயக்கும்: எவ்வாறெனில், எந்நேரமும், நற்செயல்களையே யாற்ற இணங்கும் மனமாற்றமும், பிறர் பயன்காண முற்படுவதுமாய் பண்பு அதன் பாலுளது; இப்பண்பிற்கு, பெண்மாட்சிக்கு, முதுமையே இல்லை; என்றும் இளமையே.

2. ஆதலால் இப்பேரழகைப் பெறுவதற்கு முதன் முதலில், பெண்ணின் பெதும்பை மங்கைப்பருவத்தில், உடலை உருவாக்கவேண்டும்; வலிமை பெறச் செய்யவேண்டும். உடலில், வலிமை யேறயேற, மடந்தைப் பருவத்தில், அன்னுள் மனத்தைப் பண்படுத்தல் வேண்டும். அஃதெவ்வாறு? பெண்ணின்பால், இயற்கையாய் அமைந்துள்ள, நீதியுணர்ச்சியும், பிறரை நேசிக்கும் பண்பும், வளர்வதற்குரிய நூலறிவையும் நுண்ணிய கருத்துகளையும் மனத்திடை நிரம்பச் செய்யும் வழியதாகும்.

3. மானுடன் மேற்கொள்ளும், வேலை, முயற்சி, இன்ன வகைத்தென அறியவும், அதற்குற்ற துணைபுரியவும் எவ்

வகை அறிவு பயன்படுமோ அவ்வகை அறிவு யாவையும் பெண்ணுக்குக் கற்பிக்கும் வழியை நாடவேண்டும்; அவ்வறிவு இன்னதெனத் தெரிந்துகொள்வதற்கு மாத்திரமன்று; செய்யும் வேலை, இத்தன்மைத்து, இத்திறத்து என்று உணர்தலும், அதை எவ்வாறு முடிப்பது என்று தீர்மானித்தலும் அவ்வறிவின் பயனாதல் வேண்டும். பல மொழிகளைப் பேசவோ, எழுதவோ கற்றிருத்தல் பெண் பாலருக்குப் புகழுமல்ல, பெருமையுமல்ல. தேடவேண்டுவது யாதெனின் அன்னியரிடத்து அன்பு வழங்குந் தன்மையும், அவர் மொழியில் அடங்கியுள்ள இனிமையைக் கண்டறிவதுந்தான் பெண்ணிற்குரிய திண்மையாகும்; பல திறப்பட்ட கலை நூல்களைப் படித்தறிவதும் பெண்ணிற்குப் பெருமை யளிக்காது; புறங்கடை நல்லிசையும் நாட்டாது; சீரிய முறையில் பிழையற ஒன்றைப்பற்றிச் சிந்திக்கும் திறமை வாய்க்க கற்கின், அது இணையிலாப் பண்பும் பயனும் ஈனும். இயற்கை நியதிகளின், உட்பொருளை, புதை பொருளை, உணர்தல், அவைகளின் நேர்மையை, அழைகைக் காணல், அவைகளின் விலக்க முடியாமையை அறிதல், முதலாய பேராற்றல வாய்க்கப் பெறும் பழக்கத்தைத் தரும் கல்வியைப் பெறுவது பெண்ணின் பெருஞ் செல்வமாகும். அடைதற்கரிய அணுகுதற்குமரிய, 'அடக்கமுடைமை' எனப்படும், கடிநிலத்தை முதிர்ந்த ஞானமும் செறிந்த வீரமும் பெற்றவரே எட்டிப்பார்க்க முடியுமாகையால், அதற்கு வழிகாட்டும், கலையொன்றைப் பெறுவது பேராக்கந் தரும். பல பட்டினங்களின் பெயரையோ, இடத்தையோ, சரித்திரத்தில் வரைந்துள்ள அரிய பெரிய நிகழ்ச்சிகளின் ஆண்டுகளையோ, சென்ற நாளில் திகழ்ந்த பெரியோர் பலரின், பெயரையோ அறிந்திருப்பது பெண்ணிற்குரிய கல்வியன்று; பெண் கல்வி விழைவது, பெண்ணை நிகண்டாக்குவதற் கல்ல, அகராதியாக்குவதற்கல்ல. பின்னை யாது? தான் படித்தறியும் வரலாற்றின் நிகழ்ச்சியுள், தன் உடல், பொருள் ஆவி, மூன்றுடன் நிறைவுற மூழ்கி, அவைகளுடன் உறவு கொள்ளல் இன்றியமையாச் செயல். அங்கு, நிகழ்ந்ததாக வரைந்திருக்கும் யாவற்றையும் உயிர்பெற்று எழும்படி சித்தரிக்க வேண்டும்; அச்சித்திரங்களின், இடைநின்று, மனத்திடை இரக்

கத்தை எழுப்பும் நிகழ்ச்சிகளையும், ஆச்சரியத்தைப் பயக்கும் நிலைகளையும், தனக்கென வாய்த்த நல்லுணர்ச்சியின் வாயிலாக, ஊன்றி உணர்தல் கடமையாகும்; எழுப்பிய முழு ஓவியத்தையும் அகக்கண் கொண்டு துருவவேண்டும்; இந்நிலையை, வரலாற்று ஆசிரியன், ஒருகால் மறைத்திருக்கலாம்; செய்திகளை வரிசைப்படுத்து முறையில் பிழைபட்டு மிருக்கலாம்; அவ்வழி உண்மை மங்கிநிற்கும்.

4. ஆகையால் அந்நிலையில், இறைவனால் வழங்கப்பட்டு, ஆனால், மறைந்து நிற்கும் அவனது கைம்மாறின் நீதியைத் தெளிதலும், ஆங்கு, வரலாற்றின் ஆசிரியன் காரணமாய் சூழ்ந்து நிற்கும் இருள்வழிப்படும் பிழையையும் அப்பிழைவழி நேர்ந்த தண்டனையின் தீக்கோர்வையைக் காண்டலும் பெண் பெறும் கல்வியாதல் வேண்டும்.

5. இவை யாவையும் விட முதன்மையாய் நிற்கும் ஒன்று உளது. எந்நாளும் தன் இறுதி நேரம் வரையில் தனக்கென இறைவன் அமைத்த, 'இரக்கமுடைமை' என்ற அரும்பண்பின் எல்லையை நீடித்தலாகும். தன் ஆயுட்காலத்து, தன்னைச் சுற்றியல்லாது, தனக்கப்பால், பிற இடங்களில் நிகழும் மக்களின் துயர்களை, தீமைகளை, இடர்ப்பாடுகளை, எண்ணியெண்ணித் துயருற வேண்டும்: துயருறும் வகை, அவைகள் மேலும் மேலும் எழாமல், அகன்று போகுந் தன்மையைதாய் நிற்கவேண்டும்; ஆண்டவன் வசிக்கும், நேசிக்கும் பேருலகத்தோடு, தான் வசிக்கும் சிற்றுலகை ஒப்பிடின், இவ்வுலகு அதனின் ஒரு சிறு புள்ளியேனுமாதல் அரிதென்பதை, பெண்கல்வி, உணர்த்த வேண்டும்; தன்னில் எழும் இரக்கந்ததும்பும் எண்ணங்கள் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு மாறுபடுதல் கூடாதென்பதையும், தம்மை நேசிப்பதற்கு, யாருமிலராய், ஒதுக்கப்பட்டவர்களாய், தாழ்த்தப்பட்டவர்களாய், நின்று தத்தளிக்கும் எண்ணிறந்தோர் பொருட்டு எழும் தனது கடவுள் துதி, தன் பிள்ளையின், கணவனின் துயர்நீங்கும் பொருட்டு எழுப்பும் துதியைவிட, தாழ்வுறுதல் கூடாதென்பதையும் போதிக்கும்பண்பை, பெண்பெறும் கல்வி வழங்குதல் வேண்டும்.

6. பெண், கற்கவேண்டிய கல்வி இவ்வகையாயின், கற்கக்கூடாத கல்வி ஒன்று உளது. அது பெண்களுக்குத் தீமை பயக்குந் தன்மையது; அதைத் தொடுதல்கூட பாப மாகும்; அக்கல்வி, 'தியாலஜி' 'Theology' என்பது; அந் நூல், அவர்கள் கையில் சிக்கின், மற்றக் கலைநூல்களைக் கற்குங்கால் எழும் ஐயப்பாடுகளை யெல்லாம் மறந்து, அதை யறிவதற்கேற்ற ஆற்றல் உண்டு அல்லது இல்லை யென்பதை சிறிதும் எண்ணுது, காடுமேடு தெரியாமல் தலைகீழாய் அதனுள் நுழைந்துவிடுவார்கள். அக்கலையோ, பேரறிஞர் களும் முதிர்ந்த ஞானமுடையவர்களும், பிழைபட்ட இட மாகும். ஆகவே, பெண்கள், அதனைப் பின்பற்றுவராயின், தங்களின், குற்றம், தீமை, அகந்தை, அறியாமை முதலிய யாவற்றையும் ஒரு பொதியாக்கி, அதை மாந்தரின் அழுக்கை யகற்றும் பெருமருந்தென உயர்த்திவிடுவார்கள். அன்பே உருவாய் வடிவெடுத்த இவர்கள், ஏதும் அறிதற்கிலதாய அதன் படிகளில் நின்றுகொண்டு, முதலில் குறை கூறுவர். பின், தாங்கள் ஒப்பிலா அம் முதல்வனை அடைதற்குரியவர் களென, தங்களைத் தாங்களே புகழ்ந்துகொண்டும், அவனது அரியணையையும் கிட்டிவிடுவதாகவும் எண்ணிவிடுவார்கள்; இதைவிடப் பெரிய விந்தை யொன்றும் உளது. தம் தம் குடிக்குத் தீநலத்தவராய்க் காண ஏற்படின், முதல்வனின் கருணைத் தன்மை வழி, தங்களிடத்தே உதித்த பண்புகளும், மனப்பழக்கங்களுமே அந்நிலைக்குக் காரணமென அறைந் திடுவர்; இதுகாறும், வீட்டில் வணங்கிய தெய்வங்களையும் அழகிலாப் பொம்மை யெனக் கருதி, தத்தம் மனத்திற்குத் தோன்றியவாறு அவைகளை அலங்கரிக்கத் துணிந்து விடுவார்கள். இவற்றையெல்லாம் கண்ணுறுகின்ற கணவர்கள், ஒருகால் அவைகளை யுடைத்து விட்டால் என்ன செய்வதெனத் திகில் கொண்டு அவர்களின் செயலால் துன்புற்று, வெறுப்புடன் அவர்களை நோக்காது விலகவும் நேரிடும்.

7. ஆகவே, சுருங்கக் கூறுமிடத்து, பெண் கல்வி, மேற் காட்டிய கல்வி வகை ஒன்றை நீக்கி, மற்றெல்லா வகையிலும் ஆண் கல்விக்குரிய திட்டத்தையே பின்பற்றலாம்; ஆயினும் அவைகளைக் கற்பிக்கும் முறை சிறிது மாறுபடவேண்டும்.

4B

பெண் ஒருவர், வாழ்க்கையில். எந்நிலையில் இருப்பினும், தம் கணவர் அறியவிரும்புவது யாதெனக் காணுதல் கடமை யாகும்; ஆனால் அவ்வாறு காணுதலை வெறொரு முகத்தாற் காணல்வேண்டும். ஒரு வேலையை முடிக்கும் அவனது ஆணை, அடிப்படையாகவும் வளர்ச்சிக்காகவும் அமைய, மனைவி அதன்மேற் பாகங்களை எழுப்பி தினவாழ்க்கைக்குப் பயன்படுமாறு முடிக்கவேண்டும். மேலும் விளக்கிடின், கணவன் ஒரு மொழியை அல்லது கலை நூல் ஒன்றைக் கற்க முற்படுவானாயின் அதனை ஐயந் திரிபறக் கற்றல் வேண்டும்; மனைவியோ அதையே கற்கு முகத்தான் அவனைப் போன்று கற்றல் வேண்டுவதில்லை; அம்மொழியினால், நூலினால், கணவன் விரும்பும் இன்பம் யாதென உணரும் திறத்தளவு கற்கின் போதும்; கணவனோடு நில்லாது, அவனுக்குரிய சிறந்த நண்பரின் இனிமையையும் பெருக்கும் வழியதாயின், மேலும் நன்றாகும்.

8. இத்தகைய கல்வியை, இக்கருத்தை, தமிழ் நாட்டுக்கு, வள்ளுவர் பயந்த, கீழ்க்கண்ட குறட்பாக்களுடன் இணைத்து, புதைந்து நிற்கும் பொருளைத் தேடி, மகிழ்மின்

1. மனைத்தக்க மாண்புடையளாகித்தற் கொண்டான்
   வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.
2. இல்லதென் இல்லவள் மாண்பானால், உள்ளதென்
   இல்லவள் மாணாக் கடை.
3. அணங்குகொலாய் மயில்கொல்லோ கனங்குழை
   மாதர்கொன் மாலுமென் னெஞ்சு.

—ரஸ்கின்

---

Printed at the B. N. Press, Madras. T. P. No. 526.

## பிழை நீக்கம்

| பக்கம் | பாரா | இதற்கு | இது |
|---|---|---|---|
| 29 | 6 | கருமப் பெறுக்கு | பெருக்கு |
| 30 | 2 | தனே | தளை |
| 31 | 5 | அறுவடை செய்வான் | செய்யான் |
| 32 | 1 | தோடிர்கள் | தோழர்கள் |
| 37 | 3 | நிறை | நிறைவு |

Rs. 1-4-0